ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஸ்ரீ கண்ணபிரான் புகழ்நிறைந்த

ஸ்ரீமத் பாகவத

ஏலப்பாட்டு.

OFFICE OF THE REGISTRAR ... 19 JAN 1915 ... MA

இது

கபிஸ்தலம்-ஸ்ரீமத். உ. வே. திருமலை

அ. அனந்தாசாரிய ஸ்வாமிகள்

திருவடி சம்பந்தியாகிய

திருவண்ணாமலை தாலூக்கா பவித்திரம் கிராமம்

உபாத்தியாயர்

அழகிய மணவாளதாஸரவர்களால்

இயற்றப்பட்டு

திருவெண்ணெய் நல்லூர்

கம்பர் கலாமிர்த சங்கம்

காரியதரிசி

தி. வடிவேலு முதலியாரவர்களால்

சென்னை

கிச்சினர் அச்சியந்திரசாலையில்,

பதிப்பிக்கப்பட்டது.

1914.

OFFICE OF THE REGISTRAR OF
19 JAN 1915

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஸ்ரீமத் மஹாபாகவதம்

தஸமஸ்கந்த மென்னும்

ஸ்ரீ கண்ணபிரான் புகழ் நிறைந்த

கப்பல் ஏலப்பாட்டு.

(காப்பு.)

ஏலேலோ ஏலிலலோ - எதிராஜா - ஏலேலோ ஏலிலலோ,

அச்சுதன்றன் புகழ்நிறைந்தபாகவதத்-தையிரண்டாங்கந்தமதை
இச்சையினுலேலமதில்புன்மொழியால் இசைப்பதற்கு காப்பாக.

மூடுஃ—பதின்மராமாழ்வார்கள் பாதங்கள் போற்றி
பட்டர்பிரான்மகள்திவ்ய பாதங்கள் போற்றி
நன்மதுரகவியினிரு நளினபதம் போற்றி
நாதமுனிமுதலானோர் நற்பதங்கள் போற்றி
ஆளவந்தாரின்ப தாம்புயங்கள் போற்றி
ஐவராமாரியர்களடியிணைகள் போற்றி
ஏரார்ந்த யெதிராஜரிணையடிகள் போற்றி
எம்பெருமானருள்தொழுவோரிணையடிகள்போற்றி. ()

அவையடக்கம்.

அந்தரத்தீஇ லுலவுகின்ற சந்திரனை அட்சியுற்ற கொக்கதவும்
சிந்தையினில் தனை மதித்து செருக்குடைத்தாய் செப்புவதும்
[ஒன்றுளது.

பூடுதூ:—உடுபதியேகே ளுனக்குமிருபட்சம்
உன்றனைப்போலெனக் குளரண்டுபட்சம்
உன்பட்சமொன்றமரு மொன்றுயர்ந்தோங்கும்
ஒப்பற்றவென்பட்சமொளிகுறையா தோங்கும்
இருமத்தியேழ்மீ னினக்குளது சொந்தம்
இவ்வுலகின்மீனெலா மெனக்கு சம்பந்தம்
உலகில்சிலர்முகமதற்குவமிப்பாருன்னை
உயர்ந்தோர்மனத்திற்கு உவமிப்பாரென்னை
ஆகையாலுன்னைவிட அதிகம்யானென்ன
அறைந்ததியிறுமாப் படைந்ததை யன்ன
இலக்கணமிலக்கிய மெலாமறிந்தோர் முன்
இறையேனுங் கல்வியறி வில்லாத் தீனன்
சிறுமாறுகவே செப்புவதை யுங்கள்
சேய்மொழியாய்க்களிகூற செய்தேன் விண்ணப்பம்.

தேவரெலாமதிசயிக்குந்தேன்பொழில்சூழ்தேசுடையவடமது
ஆவலுடன் அரசுசெய்யும் பொல்லா அசுராம்ஸ கம்ஸனவன் [ரை

பூடுதூ:—வடிவுடையதேவகியை வசுதேவரென்னும்
வண்மையுடையோர்க்குகடி மணஞ்செய்துமின்னும்
தங்கமயமாகிய தனித்தேரிலாக
சாரத்யகோலமாய்ச் சந்தோஷமாக
பட்டணஞ் சுற்றியே பவனி வரும்போது
படபடென்ன வசரீரி பதடியிப்போது
எதுக்குயிக்கோலம் இவள்வயிறு திக்கும்
எட்டாஞ் சேயுன்னையெவ் விதமும் வதைக்கும்
என்னவேகம்ஸனும் ஏங்கி மனநொந்து
இருகண்ணும் வீழிப்பழ மெனவே சிவந்து
அறையிலுள்ளவாளுருவி யருஞ்சினம் முற்ற

அஞ்சஃமற்றங்கைபின் னளகத்தைப்பற்ற
அதுகண்ட வசுதேவ ரங்கந்துடித்து
ஐயோவென்செய்வதென அடிவயிற்பிடித்து
சாற்றுவார் கம்ஸனே சற்றே பொறுப்பாய்
சனிக்கின்றகுழவிகட் சகலமுமொறுப்பாய்
என்னவுங்கொண்ட சினம் ஈனன்றுறக்க
எந்திழைதனக்குமா றிளவல் பிறக்க
பாதகனும் நாரதர் பகர்ந்ததோர்கோளால்
பதைக்கவேவீசினன் பாலர்களைவாளால்
ஆதிசேஷனுமேழா மம்ஸமதாக
அதிஜோதியாய்க ருவமர்ந்தனராக
உயர்கருவைமாயையால் ரோகணித்தாங்க
உதித்தனரும்பர்கட்குவகையது வோங்க
எட்டாவதெம்பிரான் இடக்கர்கட்காக
ஏரார்தேவகிவயிற் றிடமுருவதாக
திசைமுகருத்ரேந்ராதி தேவர்களும் போற்ற
திவ்யசுபசகுனமிளிரி க்ஷேமமெனத்தோற்ற
ஆவணி ரோகணி நாளில் அமரபட்சத்தில்
அஷ்டமிச்சந்திரனுதைய மாகுங்காலத்தில்
சதுர்புயத்தொடுஞ்சங்கு சக்ரமுதலாக
சர்வ்வாலங்க்ருதமுடன் ஜனனமதாக
வசுதேவ தேவகியர் வடிவழகைக்கண்டு
மனமதிலடங்கா மகிட்சிமேற்கொண்டு
பலவித மாகப்பராவிப் பணிந்து
பக்தியொடு மொருவார்த்தை பகரத்துணிந்து
மாயனே யிவ்வுரு மறைத்தருளல் வேணும்
வஞ்சகனறிந்திட்டால் மாத்துயர் காணும்
என்னபகவானுமுன் னெழிலுருவடங்கி
எழிலார்ந்தவசுதேவ ரிருகரமடங்கி
அந்தகாரம்மகல அதிஜோதியுடனே
ஆயர்பாடிக்கி யெழுந்தருளினது கப்பல். (எ)

வண்பொழில்சூழ்சோகுலத்தில்வசுதேவர்வடிவமிகுகண்ணனை
பெண்குழந்தையீன் றுநல்லபேறுபெற்றபிடியிடையாளசோ [யும்
[தையிடம்

முடுகு:—அங்குளோரறியாதமர்த்தி களிகொண்டு
அழகானபெண்மணியை அங்கைகளிற்கொண்டு
வடமதுரைசேர்ந்தபின் வாயிலோர்கோளால்
வதைக்கிறேனச்சிசுவை மாச்சுரிகைவாளால்
என்றோடிவரும் வழியிலேயிடறி வீழ்ந்தும்
எர்பெற்றமுடிதலையினின்றுக்கவிழ்ந்தும்
கவிழ்ந்ததும் பாராமல் கடுங்கோபங்கொண்டு
காதகன்கடுகவரகயற்கணாள் கண்டு
அண்ணாவே யென்பிள்ளை யாறுவரைமடித்தாய்
அதனாலெனக்குமிக வாரணார் கொடுத்தாய்
மைந்தர்களிறந்திட்ட மனக்கவலை தீரும்
மணிபோன்றவிப்பெண்ணால் வருந்துயரொன்றேரும்
என்றமுன்றனையால் இளஞ்சிசுவைமூட
இரக்கமில்லாமலே யேகவார்ப்பாட
மாகவச்சிசுவதை யதட்டிப்பிடுங்க
அப்பொழுது தேவகியும் அலறீஇ நடுங்க
அச்சிசுவைபாறை யிலடிக்கத் தொடங்க
அகமமதையன்றுதொட்டளவினிலடங்க
அவன்மாருதைத் தந்தரத்திற்கிளம்பும்
அருங்குழவிமாயையவன் அறிந்திடவிளம்பும்
எனைக்கொல்லவுன்னாலே யேலுமோடாமூடா
எதுக்கென்னைப்பார்த்தே மாறுகிறாயோடா
உனைக்கொலவந்தவனண்ட ருளவாய்ப்பாடியிலே
ஒளிவுற்றுவளர்கிறானேடோப்பயலே
என்றிந்தவிதமாயிசைத்துயரவேக
இடிகேட்ட நாகம்போல் எங்கிவிரைவாக
தங்கைவசுதேவர்களை தளையகலசெய்து
தயவுடைய சொற்களாற் சமாதானம் செய்து

கோகுலந்தனிலுள்ள குழவிகளைமுற்று
கொன்றிட்டு வருகவென கொடுமைகள் சற்ற
அரக்கியாம்பூதனையை அகிலருங்காண
அனுப்பினான் ஊர்வசியும் அழகிற்குநாண
அளகபாரங்களுக்கணி செய்மலர்வாச
மாய்ப்பாடிதனைவளைத்ததிசமணம்வீச
பஞ்சபாணன்றனது பத்தினியை நேர
பரபரப்பாயாயர்ப் பாடியைச்சேர
அங்குள்ளவாலீபர் அகிலருங்கண்டு
ஆஹாயிப்பெண்ணழகிற் கந்தமெங்குண்டு
என்றுசொலியேமோகித்தே மாந்திருக்க
இராக்கதி விஷப்பாலீ ரம்மம்பெருக்க
நந்தகோபன் மனையில் நாணுமற்சென்று
நாம்நாடிவந்ததுவும் நல்வேளையென்று
பங்கயக்கண்ணனைப் பரிவாயெடுத்து
பாங்காய்தாலாட்டியுட் பசையினைவிடுத்து
உச்சிமுத்தாடி தன்னுயர் மடியிருத்தி
உபாயமாய்க் கொடுவிஷ முளப்பாலருத்தி
கொல்லலாயென்றக் குறிப்பிட்டிருக்க
கோகுலமாதர்குழு குழுவாய் நெருக்க
மாகவேகூடவும் அசோதைரோகணியும்
அதிசயமுற்றிந்த அழகுபெண்மணியும்
செந்தாமரைத்திருவேதியக்கமிதிலில்லை
சேயனிவன்றாயிவள் திரிபென்பதில்லை
என்றுரைத்தேமாந் திருந்தாரேயொழிய
எடாதே குழந்தையை என்றவர்கள் மொழிய
இல்லையவளச்சுதனை யிருகையாற்றூக்கி
இளநகையொடுதனத் தின்கச்சை நீக்கி
சாப்பிடும்பாலென்று சதிகாரிசொல்ல
சக்ரபாணியுமச்சழக்கியைக்கொல்ல
திருவுளமாய்ச் செவ்வாய் திறந்து மகிழ்ந்துப்புன்
சிரிப்புடன்பாலம்ஸை செய்கிறவர் போல்வன்

பருவரற்கடுகிறைப் பயோதரவழியாய்
பசரத்தந்தசைமுதற் பலமுமோர் வழியாய்
உயிருடனேசேர்த்து உறிகின்றபோது
ஓகோயீதென்ன் வுற்பாதமிப்போது
அப்பப்பா பால் நீ அருந்தினதுபோதும்
அறியாமல்வந்தேன்விடு அணுகேனெப்போதும்
என்றுளரிபாதகியு மிருகையும் விட்டு
இடிபோலவேபெருமிரைச் சலதையிட்டு
தரையினில்விழும்போது தன்னுருவதாக
சாய்ந்தனளுயிரகல சைலமொப்பாக
அரக்கிதன் விஷவகல மாமத்திதனிலே
அமுதுபற்றுக்குறையால் அலையுதையாகப்பல் (௭)

(௮)

இன்னமும்பாலுண்பவர்போல்பூதனையின்இருதனமுந்தாவுகின்ற
சின்னகிருஷ்ணன் திருக்கூத்தை அங்கு சேர்ந்திருந்தபெண்க
[ளுடன்

மூடுது:—அசோதை முதலானோர்கண்டகங்கம் நடுங்கி
அப்பனையெடுக்கவரு கணுகத் தொடங்கி
எப்படியாமோவென் றிருமனமதாகி
எம்பிரானையெடுத் தெழில்மனையுள்ளேகி
ஆலமுதற் சாந்திகள் அகிலமும் நடத்தி
அழகார்ந்த தொட்டிலினி லன்பாய்க்கிடத்தி
இன்புற்றிருக்கையில் இச்செய்தியாவும்
இறையானநந்தன்செவியேற் கவனேவும்
வேவுகாரர் அவளைவெட்டியே கூட்டி
விறகிட்டு அக்கினியை விரைவாக மூட்டி
எரித்திடவும் எம்பிரா னிதம்பரிசத்தாலே
எத்திக்கும் நற்கந்த மியலமென்மேலே
அச்சுதன் உலகமே அடைந்தனள் கம்ஸன்
ஆணைதன்னாற்சகட. னாகியமாவஞ்சன்
சன்மநட்சத்ரச் சடங்குகள் முற்ற
சாஸ்திரப்படிகண்டு தனித்தொட்டிலுற்ற
செம்பவளவாயனிணை திருவடிநோக

* ஜெகஜோதியாம் ரட்சாதிகிரிபுகுந்தேக
பசியால் வருத்தமுறும் பாலகனைப்போலே
பவளவாய்விட்டழுது பாதத்தினாலே
உந்தினார்சகடனு மொழிந்தனனுருண்டு
ஓடினாளசோதையும் உள்ளம்மருண்டு
அங்குள்ளபாலரால் அகிலமுந் தெரிந்து
ஆலமுதற்சாந்திகள் அகிலமும் புரிந்து
நலமுற்றிருக்குமோர் நாளையில்மாலை
நங்கையசோதை நசையால் கொடப்பாலை
பளுவாகத் திருமேனி பாங்கலவென்றெண்ணி
பாரினில்விடவிதே பக்குவமென்றெண்ணி
ஆயர்ப்பாடியிலுள்ளோ ரட்சிகளைமூட
அசுரதிருணாவர்த்தன திகவார்ப்பாட
மாகசுழற்காற்றாக அச்சுதனை தூக்கி
அதிவிரைவாய்ச் சென்றனனம் பரம் நோக்கி
ஆபத்சகாயனும் அவனுயிரையுண்டு
ஆலமுதற்சாந்திகள் அகிலமுங்கொண்டு
எழுந்தருளியிருக்குமோர்நா ளெம்பிரான்வாயில்
யாவுங்கண் டன்னையதி சயிக்குந்தறுவாயில்
புனிதகற்காசாரியெனும் புரோகிதருமுற்றார்
புகழ்காமதேநுக்கள் புண்ணியர்கள் பெற்றார்
அனந்தரம் ராமகிருஷ்ணா ளான விருவோரும்
ஆச்சரியமுண்டாக அவனி மீதாரும்
பாம்புகளை வால்பற்றி பலமாய்ச்சுழற்றி
பருத்தகிளைமான் கொம்பைப் பாய்ச்சலால்பற்றி
ஒசித்தோடுங்கன்றுகள்வா லோடி பிடித்தோடி
ஒளிவுடையவக்ரிதொட லோடுபலவாடி
இவ்விதமதியுசிதலீலையாய்கடலில்
இடையர்கள்களிகூற யேகுதையா கப்பல் (௭)

---

* இரட்சாபந்தன சக்கரத்தில் பிரவேசித்து சென்றனன்.

(௯)

இந்தவிதமாகநந்த கோபால ரீருதனைய ரானவரும் பிந்திசிலநாட்களிலே சுவர் பிடித்து தத்தி நடக்கலுற்றார்

பூடுதூ:—அநந்தரம் ஆயர்களருந்தனையரோடும்
அழகான பூனைகளோடரிகள் தன்னோடும்
கோபியர்கள் வீடுகளிற் கூசாமலோடி
குளிர்தயிர்பால்வெண்ணெய்களுட் கொண்டுகளவாடி
கூத்துபல செய்கையில் கோபியர்கள் கூடி
குணபூஷணியாம்பூங் குழலியிட மோடி
அம்பன்னகண்ணீயசோதையே யின்று
அரவிந்தாட்சன் செய்த வாடல்மிக நன்று
பால் கறந்து கன்றுகளை பதனமாய்க்கட்டி
பாங்காகவேயெங்கள் பதிதொழில்களட்டி
இன்றியே செய்கையில் இவனங்குகிட்டி
இளங்கன்றுகளினிணைய லெனுந்தும்பை[illegible]யெட்டி
அவிழ்த்தமூலையடியாய் ஆச்சரியமாக
அதட்டிடவுங் கன்றுகளம்மாவென்றேக
என்னமோவிபரீத மென்றோடிவந்து
இக்கண்ணன் செய்கையை யெதிர்கண்டுவந்து
ஏண்டா சின்ன கிருஷ்ணா நீதென்றாலில்லை
என்றெதிரிலே வந்தீ யென்கிறான் பல்லை
என்று சிலர்முறையிட வின்னுஞ்சிலரம்மா
இனி நாங்களிவ்வூரில் இருப்பதுஞ் சும்மா
பால் முதல் வெண்ணெய் பதனஞ் செய்திருக்கும்
பயங்கரமானதொருபதியில் யாருக்கும்
எட்டாத வுறியை யிவனெட்டியே யெடுத்து
இன்பாயுண்டரிகளிந்திற்குங்கொடுத்து
குறைவயிற்றுக்குன்பால் கோபிகாகொஞ்சம்
கொடுத்தால் குடித்துக் குளிருமென்னெஞ்சம்
என்கிறானென்றுசொல வின்னுஞ் சிலரின்று
எய்விதந்திருடுவா னினியறிவோ மென்று

அந்த காரமுள்ள அறையிலுறிகட்டி
அதன் மீது பால் தயிர் அளைகளின் சட்டி
அடுக்கியேய தன் மீதருங் கயிறு கட்டி
அசோதையின் மகனை அணைக்கிறேன் கட்டி
என்றிருக்கும் எங்கள் இருகண்படாமல்
இருந்தபாண்டங்களில் எதுவும் விடாமல்
கும்பலாய் தெருவினில் கொணர்ந்து சாப்பிட்டு
கோபீ கோபீ யென்று கொஞ்சி கூப்பிட்டு
குரங்குகள் பாற்றயிர் குடிக்கின்ற திங்கே
குசு குசு மந்திரங்கூடு மோடியங்கே
என்று சொலி யெங்களை யேய்க்கிறானேடி
என்னவுஞ் சிலர் நாங்களிவ்வூர் விட்டோடி
போகட்டுமோ வுந்தன் புத்ரனுக்காக
பொழுதுடன் வெண்ணெய் யெனும்பொருண்முதலாக
சாப்பிட்டு நாங்களுஞ் சந்தோஷமாக
தாமோதரன் வீடெலாந்தாவினவனாக
இந்தப்பாழ் வீட்டிற்கு யேன்வந்தேனென்றும்
இனியாகிலும் புத்தியிலாதா வென்றும்
அழகான தொட்டிலுள வருமகவைக்கிள்ளி
அழச்செய்கிறானேடி அலறியே துள்ளி
என்றுரைக்குங் கோபவேந்திழையா ளைகள்
இரைச்சலிடும்படியாக யேதுதையாகப்பல். (ஏலேலோ)

(கு)

இன்னுஞ்சிலர் அடியம்மா யெங்களில்லில் இருட்டறையில்
(நடுமேட்டில்
பன்னுமளைப்பால்முதலாய் உறியதனில்வெகு பதனமுடன் வைத்
[திருந்தோம்

மூடு:—உன் றன்மகனுள் நுழைந்தால்தலைமடக்கி
ஒன்றொன்றாய் மணைகளை உயர்ந்திடவடுக்கி
எட்டினனவ் வுறியுமெட்டாத தாலே
எடுத்து நிலமத்திலடித்து புழையாலே

தரைதனிலே யொழுகும்பால் தயிர்களைக்கண்டான்
தாமரைநேர் திருவாயால் தட்டாமலுண்டான்
என்றுரைக்கும்போது யின்னுஞ் சிலர் கூடி
என்னடி யசோதையே யிதுவுமழகோடி
வெண்ணெய்களையெல்லாம் வெகுபத்ரமாக
வேறொருவர்க் கெட்டாவிதம்முள்ளதாக
செய்திருந்தோமவைகளையுன்சேயன் எடுத்து
சீக்கிரமோரிருட்டறையை தெரியாதடுத்து
குரங்கு பூனைகளினொடு கூடியேவுண்டு
குலுங்கக்குலுங்கநகை கொள்வதைக்கண்டு
ஆரடா திருடா அறைக்குள்ளேயென்றால்
ஆரடீ திருடீ அதட்டுகிறாய் நின்றால்
விடுவேனோவென்றெச்சல் வெண்ணெகளை யாங்கள்
விதிர்த்திடவாயிற்பூசி வேசியரே போங்கள்
அரசனிடம்போகலாமென் றறைகிறானேடி
அவன்றிரம் நாளைக்கி யறிகிறோமோடி
என்றுகோபியர்கள் முறையிடுகின்றபோது
எம்பிரான்பயமுளர்போலெழிலனை மார்மீது
சேரவென்னிடந் திருடன் சிக்கினனென்று
திரளானபெண்களொவ்வோர் சிறுவனொடுஞ்சென்று
அசோதையின்மடியிலென்னப்பனைக்கண்டு
அங்கைகளிற்காணுமலதி வெட்கங்கொண்டு
ஏகமறுநாளொருத்தி யேண்டீயசோதா
என்னனுமுன்மகனோ டிப்பெரியவாதா
அடுப்பண்டை பாலை வைத்தக்கி நியையவேண்டி
அடுத்தமகள் வீடேகி அரைக்ஷணம் நின்றேனடி
சின்ன கிருஷ்ணன் சென்று தீம்பாலையுண்டு
சிரிப்புடன் சென்றுறியின் திரள் வெண்ணெயுண்டு
அகப்படாமல்ஆட்ட மாடுகிறானேடி
அழைப்பாய்சற்றென்னவோரரிவையங்கோடி
அசோதாவுன்மகன் வெண்ணெயாவும் விழுங்கிட்டு
அப்பாத்திரத்தையோரகன்கல்லிலிட்டு

உண்டாகுமோசைக்குவக்கிறாளேடி
உன்மகன் செய்கைதான் உனக்கு நன்றோடி
என்னவின்றொருகோபி யீதெங்குவுண்டு
என் மகளையேமாற்றி யிரண்யவளைகொண்டு
நாவற்பழங்கொடுதின்று நானல்ல வென்று
நகைக்கிறானென்றினும் நாணாவிதம் நவின்று
செல்லவும் எம்பிரான் திருவீதிதனிலே
சேடார்ந்த சிறுவருடன் சேர்ந்தாடுகையிலே
மண்தின்னுபவர்போல மாய்கைதனைக்கப்ப
மாதாவசோதைக்கிம் மாமாயஞ்செப்ப
சிறுவருடனே கண்ணன் திருத்தமையன்சென்று
தின்றானம்மாகண்ணன் தெருமண்ணையின்று
என்னவோர் சிறுகோலை யெழிற்கரங்கொண்டு
எதோ காட்டுபார்ப்போமென்றிளநகைக்கொண்டு
சென்று திருவீதியிற் செல்வனைக்கண்டு
சின்னகிருஷ்ணா மண்ணைத்தின்றதுவுமுண்டு
என்று சிறுபாலரொடுன் ணிஷ்டமுளவண்ணன்
இசைத்தனனென்னிடமேனெனக்கண்ணன்
அம்மம்மா அவர்கள் மொழியத்தனையுஞ்சும்மா
அடிப்படுத்தலாமென்று அறைகிறாரம்மா
என்னவும சோதையும் இது நல்ல ஞாயம்
யானுஞ்சற்றறிந்தவளேயாகுமுன்மாயம்
செவ்வாயைத்திறவென்று சிறுகோலை நீட்ட
திருப்பவளவாய்தனைச் செல்வனுங்காட்ட
அண்டரண்டசராசரங்களையுங்கண்டாள்
ஆய்ப்பாடியுந்தன்னரண்மனையுங்கண்டாள்
அம்புயக்கண்ணன்மடியிலங்காரக்கண்டாள்
அகிலமுங்கண்டதியாச்சரியங்கொண்டாள்
எதேதுபிள்ளை யிவன்நமக்கன்று
எங்கும் நிறைபரப்பிரம்ம மேயிவனென்று
சந்தேகங்கொள்கின்ற சமயத்தில்வாயை
சடக்கெனவேமூடியே தந்தனர்மாயை

அசோதையம்மாய்கையினிலாழ்ந்தவளாக
அன்னைமடிமீதிலெழுந்தருளினது கப்பல் (ஏலே)

(ரு)

இந்தவிதம்கோகுலத்தில் இராமகிருஷ்ணுள்எழுந்தருளியிருக்
நந்தனதுபத்திரியாம்மிக்கநலமுடையஅசோதையவள்[ளைையிலே

முடுகு.—சாதியர்தமக்கெலாந் தகுந்ததொழிலிட்டு
தங்கவொட்டியாணமுதற் றனியணிகள்விட்டு
விட்டுஜ்வலிக்கமதி பிம்பமுகத்தில்
வியர்வைசிறுமுத்துபோல் விழவும் நிலத்தில்
சரங்கள் சிவக்க தயிர் கடையுமப்போது
கார்வண்ணனந்தமிகு கடிகமலப்போது
ஒத்தகரத்தால் மத்தை உறுதியாய்ப்பற்ற
ஒண்டொடியசோதையும் ஊக்கமுடனுற்ற
சமர்த்தடையசாட்டியுஞ் சாயாதிழுக்க
தளரவையன்கண்கள் தண்ணீரொழுக்க
அழுவதைக் கண்டன்னை அருமை திருமகனே
அழவேண்டாம் பாலுண்பாய் அழகானமுகனே
என்றுதன்செல்வனை யெழில்மடியிருத்தி
இருதனமும் மாற்றிபாலின்பாயருத்தி
இருக்ககாய்பாலடுப் பிற்பொங்கிபோக
எம்பிரான்தன்னை விட்டேக விரைவாக
அப்பொழுது கண்ணபிரான திகோபங்கொண்டு
அழுகையுடன் சென்றுகரத் தால்மத்தைக்கொண்டு
சுற்றியுள்ளகயிறுகளை துரிதமுடன் பல்லால்
துண்டுதுண்டாய்க்கடித்தொருகுழவிகல்வால்
பாண்டத்தை மோதிதயிர்பார்தனிலேவோட
பங்கயக்கைரேகை பசுந்தயிரில் கூட
வாரியுண்டோரறையில் வண்மையுடன் சென்று
வைத்தவன்போலுரலேறி மகிட்சியுடனின்று
வெண்ணெய் பாண்டங்களுளவெல்லாமெடுத்து
மித்ரவரிபூனைகட்கு மிகுதியுங்கொடுத்து

அருந்துகையி லோடினவ சோதையும் பாலே
ஆற்றியவ்விடம் வந்து அணுகிடுங்காலே
ஆறுபோல் வெள்ளமிடலான தயிர் கண்டாள்
அருங்குழவி சிறுவிரல்க ளத்தயிரில் கண்டாள்
அறுப்பட்டிருக்கு மத்தருங்கயிறுங்கண்டாள்
அலங்கோலமானமத்தானதையுங் கண்டாள்
உடைப்பட்டதான தயி ருயர்பாண்டங்கண்டாள்
உவணகேதனன் செய்கைக்குவகை மேற்கொண்டாள்
எங்குதான்சென்றுனென் றிளநகைக் கொண்டாள்
எம்பிரானையோ ரிருட்டறையில்கண்டாள்
சந்தடிக்காட்டினுல் தாண்டிடுவானென்றும்
தந்திரமாய்பற்றுவதே தகுதியுடைத்தென்றும்
சந்தமுளசிறுகோலேத்தன் பின்னேகொண்டு
சாதுவாய்வருகின்றதாய்தனைக்கண்டு
அருந்திபுச்சிஷ்டமாம் அளையைக்கொண்டு
ஆய்த்தெருவாங்கடலோடுதந்தமுளகப்பல் (ஏலே)

(எ)

மறைகளுக்குமெட்டானை அசோதையவள்மாய்கையினுல் மக [னென்று
றையாக பிடிப்பதற்கு அம்மா தொடங்கினது மதிசயமே.

முடுகு.—அளகபாரம்மவிழ அடிக்கடி முடித்து
அலங்கோலமாகின்ற ஆடையைப்பிடித்து
தனங்கள்குலுங்கவிருதாட்களதுநோக
தண்முத்துபோல்முகந் தனில் வியர்வையாக
வருகின்றதாயின் வருத்தமது கண்டு
வாடினுள்தாயென மயங்கி பிடியுண்டு
அன்னைசிறுகோல்காட்டிய தட்டினதாலே
அம்புயக்கண்ணனமுவச்சத்தினுலே
அஞ்சினுன் பாலகன் அதட்டொணுதினிமேல்
அவசியம் உரலுட னணைத்திடுதல்மிகமேல்
என்று ஜனகாதியரும் ஏத்தவரிதான

இறைவனையதிலேசா யெண்ணியளவான
சயிறுகொண்டுரலண்டை காமரிடைதன்னில்
கட்டவொரு சுற்றுக்குக்காணுது முன்னில்
அதிநீளமாங்கயிறை யதனெடுபிணைக்க
அதுவுமொருசாண் குறையவதிலொன்றிணைக்க
பின்னும் விரற்கடைபிணைக்கநான்கில்லை
பிணைக்கமற்றென்று விரற் பின்னும்ரண்டில்லை
என்னசெய்வேனென்று யில்லமதிலோடி
இணைக்கயிற்றயிர்க் கயிறேடின்னமும் நாடி
கொடுவந்த கயிறுடன் கோபியர்கள் எல்லாம்
கொணர்ந்துதந்தக்கோ குலக்கயிற்களெல்லாம்
எடுத்தெடுத்திணைப்பதினு லிருகாஞ்சிவக்க
இன்னும் விரற்கடை யெட்டாமற்றிகைக்க
அன்னையின்றன்பமோ வதி மிகுதியாக
ஐயனருளக்கயிறதி மிகுதியாக
செம்பவளவாயனை சேர்த்துரலிற்கட்டி
சேர்ந்தசோதை வீட்டின் செயல்களையட்டி
இன்றியே செய்கையில் எம்பிரானுரலை
இழுத்து புறக்கடைமருதத் திடையேகவரலை
என்று திருவடிகளா லிணைமருதையுந்த
இற்றுநிலம்வீழுமர மிருந்திருவர் மூந்த
நளகூபமணிக்ரீவ நாமங்களுற்றோர்
நாரதர் கோபத்தால் * சற்சாபம் பெற்றோர்
என்றவர்வணங்கிவடக் கேகினவுடனே
இற்றமரவொலிசெவிக ளேற்றுவிரைவுடனே
நந்தனுமசோதைமுதல் நங்கையர்களோடு
நாடிவந்திற்றமர நடுவிலுரலோடு
கட்டுண்டிருக்கின்ற கண்ணனைக்கண்டு
கலங்கி யென்னப்பன் கடாட்சமது கொண்டு
அங்குள்ளபிள்ளைக ளகிலமுஞ் சொல்ல
அறியாதபிள்ளைகள றைதல்நிஜமல்ல
என்றுரற்கண்ணனை யிசைவாயெடுத்து

---

* திருவடி பரிசத்தால் சாபம் நீங்கப்பெற்று.

எவ்வளவோசாந்திகள் ஏர்பெறமுடித்து
அன்னை தன்மடியேற்ற அவனியிற்குதித்து
அம்புயக்கண்ணனவரங்கந்துடித்து
அம்மம்மா பூச்சியிதோவதோவருகுதென்பார்
அடிக்கவருகின்றான் சூடத் தமர் ஐபயனென்பார்
இவ்விதலீலைபலவியற்றி மகிழ்கொண்டு
இருக்கையிலோர்நாள்சம்புவின்கனிகள்கொண்டு
அம்மையாளொருத்திவர அரிசியையள்ளி
அழகான திருவிளை யாடலுடன்றள்ளி
ஒடிவரயோதிரத்துளசந்திலெல்லரம்
ஒழுகச்சென்றம்மாயிவ் வுயரரிசிக்கெல்லாம்
பழங்கொடுமெனவம்மைப்படியதனில் வாங்க
பத்மாட்சனம்மைமுகம் பார்த்து மனமேங்க
அவள் அப்பா வேண்டியதை யள்ளிக்கொள்ளென்ன
அள்ளவப்பழங்கள்மணியாகியே மின்ன
அஞ்சவுமம்மையார் யாவுமுன் சொம்மே
அஞ்சாமல் நீ கொண்டு அகலலாமம்மே
என்னவுமம்மையாரின் புற்றில்லேக
எம்பிரானுங்குரங்கிந்திகள் சகிதமாக
சாப்பிட்டிருக்கவோர் ஜன்மநாள்தன்னில்
சாய்ந்த வயதுடையவொரு சத்புருஷன் முன்னில்
ஆவேசமாய்வந்து ஆயர்களே நீங்கள்
அகிலருங்குடியாய்ப்ரந்தாரண்யம் போங்கள்
என்னவுங்கோபால ரின்புடன்செல்ல
ஈனவத்சாசுர னிளங்கன்றாய்ச்செல்ல
கண்ணபிரான் விளவினில் கால்வாரிசாட
கனிகள் விழகடையனுயிர்கணமதனிலோட
கனிகள்தின்றுப்பாலர் கன்றுகளை யோட்டி
களிப்புடன்யமுனையில் கருமைநீர்காட்டி
குளிர்நிழலிற்சேர்த்து கும்பலாயோடி
கொழியலாம் மணலிற் குதூஹலமாய்க்கூடி
அவரவர்கள் கொடுவந்த அன்னமதையுண்ண

அப்போழ்து கொக்காய்ப்பகாசூரன்கண்ண
கண்டுகோபலர்கள் கலங்கி இயழுங்க
காதகன் கண்ணனைக்கடுப்பினில் விழுங்க
கண்டமதுகனலாக கக்கினன் மூக்கை
கடுப்பிற்கிழித்துக்கழித்திட்டாராக்கை
இவ்விதவிந்தையை யாவருங்கண்டு
இன்புறப்ராந்தாரண்யத்திலேகுதையாகப்பல் (எ)

(அ)

பிருந்தாவனந்தனிற் கண்ணன் ஆயர்ப்பிள்ளைகளைக்குழலூதி
ஒருசேரவரவழைத்து ப்ரம்ம உற்சவம்போ லுவப்புடனே.

மூடுது:—கன்றுகளை புல்லுளவக்கானத்திலோட்டி
கவனமாய் மேய்த்து நீர்களை நீரக்காட்டி
குளிர்நிழலில் வெயிலுக்குக் கும்பலாய் சேர்த்து
குஷ்டியின் பாதையெனுங் கொடுமையைத் தீர்த்து
கொள்ளக்கோபாலர்கள் கும்பலாய்க்கூடி
குறைவற வருந்திகுதூஹலமாகநாடி
ஆனந்தமுறப்பாந்தளாகியே துஷ்ட
அகாசுரனனவனந்தரம் முட்ட
வாய்திறந்துக்கொண்டு வழியிற்கிடக்க
வற்சங்க ளொடுபாலர் வயிற்வழி நடக்க
எம்பிரானவ்வழியே யேகிப்பெருக்க
ஏற்றமுளவவ்வுருவையிராக்கதன்பொருக்க
வன்மையிலனுகியே வாய்கிழிந்து மாள
வற்சங்களுடனயர் மைந்தர்களும்மீள
அரக்கனுயிரையன்றிரு வடிகள்மலரடைய
அமரர்கள் மலர் தூற்றியானந்தமடைய
பத்மாட்சன்பாலர்களின்பசிவேதையோர்ந்து
பாலர் கன்றுகள் சகிதம் பருமயமுனைசேர்ந்து
தண்ணீரைக்காட்டியாய்த் தனைய ரொடப்பாடி
சந்தமுளமணல் மேட்டில் சதிராகக்கூடி
பாலர்களெலாந்தன்னைப் பதுமவிதழ்போலே

பரிவுடன் சூழ்ந்திடவும் பரிகாசத்தாலே
ஆனந்தமாகச் செய்ததிமதுரமுடைய
தான தயிரன்னமதை யருந்தவளமுடைய
மைந்தருடன்கன்றுகளை மண்பொதுத்தந்தை
மறைத்திடக்கண்டமணி வண்ணனிதுவிந்தை
என்றுவற்சங்களுடனிஷ்டர்களினுடைய
இலக்கங்குறிக்குண மென்பவைகளடைய
தானுகசிருஷ்டித்தோர் சம்வச்ரமாக
சதிருடன் விளையாடி சந்தோஷமாக
மறைத்திட்டகன்றுகளை மைந்தர்களுடனே
மணிவண்ணன்பால் சேர்த்துமா பயமுடனே
தன்பிழையுரைத்துமே க்ஷமைகோருகின்ற
சதுர்முகன்றுதிக்கடலிற்சார்ந்ததையா கப்பல் (௭)

(௯)

பிரம்மனவன்றொழுதுசென்றஅதன் பின்னுஞ்சில நாட்களிலே
தரமுனரக்கவரிதான ப்ருந்தாவனத்தில் தமையனொடும்.

முடுகு:—பாலர்களொடுஞ் சென்று பசுக்களை நல்ல
பசும்புற்கள் தனில்விடவோர் பக்கமாய்ச்செல்ல
அச்சுதனுமடவியினிலாக்களை பேரிட்டு
அதிமந்தகாசராயருகு கூப்பிட்டு
கோக்களை தண்ணீர்காட்டி குளிர்நிழலிற்சேர்த்து
கோபாலகுமரர்முறை கூறுவதைப்பார்த்து
பலராமசகிதராய்ப்படர்ச்சிமேற்கொண்டார்
பனங்காட்டில்மிகுதியுள பழங்களைக்கண்டார்
பனைகளைப்பல தேவர் பற்றி யாட்டிடவும்
பலபலவென்று வெகுபழ முதிர்ந்திடவும்
கனிகள் விழுமோசையைக் காதுகளிலேற்ற
கழுதையாந்தேனுகன்கர்ச்சித்து சீற்ற
மாய் வந்துபலராம ரணிமார் புதைக்க
வாண்மையுள ஸ்வாமியுமவ்வரக்கன் பதைக்க
பனைகளிற் கால்களைப் பற்றியே யெறிய

படபடென வொடியவோர் பரியசிலமுறிய
காதகனிவ்விதமழிய கழுதையுருக்கொண்ட
காதகரீரடிகளால் கணத்தழியக்கண்ட
பாகசாதனன்முதலோர் பருவரல் விண்டார்கள்
பசுக்கள்புல்லுணக்கனிகள் பாலருண்டார்கள்
பாங்குடன் அவரவர்கள் பதியடைந்தார்கள்
பட்சமுளதாய்களுடன்பலவும் நவின்றார்கள்
கண்ணபிரானிவ்விதங் களிப்புற்றிருக்கும்
காலத்திலோர்நாளிற்காளியனிருக்கும்
பழுவத்திற்பசுக்களைப் பலரா மரின்று
பாலரொடுகண்ணன்பரிந் தோட்டிச்சென்று
மேய்த்தாக்கள் தனை நீர் விடாயகலக்காட்டி
வியப்புறவும் பிள்ளைகள் விடாயதனையோட்டி
கொள்ளலாமென்றிருகைக் கொண்டுபுனலள்ளி
குடிக்ககோபாலருடன் கோக்களுந்துள்ளி
அடங்கலுங்கரையதனி லதிமூர்ச்சையாக
அருட்கமலக்கண்ணனுமவ்விஷமதேக
கிருபைசெய்துப்பட்சிகேசன்றன்னாலே
கேட்ற்ற கடப்பையெனுங் கிளர்தருவின்மேலே
அதிமானுடலீலையாயேறிமுடிவில்
ஆனந்தமாய்க்குதித்தாடலொடுநடுவில்
காளிங்கமடுவெனுங்கனவிஷக்கடலை
கஞ்சாய்கலக்குதையா கருதரியகப்பல் (௭)

(௮)

கண்ணபிரானுடலினால் காளிங்கமடு கரைகளெல்லாம்நீர் வழிய தண்ணெனவே காளிங்கன் துளவமணிதூயவனைக்கண்ணுற்று.

முடுகு:—ஆரடாயிச்சிறு வனஞ்சாமலின்று
அவமதித்தானமது ஆக்கினையைநன்று
இவனுடைய வாண்மையை யிறக்குகிறேனிப்போ
என்றுமேகாளியனிறைக்கவிஷமப்போ
எம்பிரான்கிஞ்சிற்று மிளையாது சண்டு

இறுமாப்புடன்மன தெரிச்சல்மேற்கொண்டு
அதிவிரைவாய் அணுகிவிஷ மாம்பற்களாலே
ஐயனைக்கடிக்கவும் அழிவிலாதாலே
பாதாதியாய்க்கேச பரியந்த முடலால்
பக்தபரிபாலனைப் பந்தித்து விடலால்
பசுக்களுங்கோபால பாலருங்கண்டு
பரிதபித்ததிமூர்ச்சை பயமதாற்கொண்டு
அருமையாய்த்தேறியே யழுமனதராக
ஆய்ப்பாடியுள்ளோர்கட் கவசகுனமாக
அசோதைநந்தன் முதலோரதிவேகங்கொண்டார்
அழகானகாளிங்கமாமடுவைக்கண்டார்
கட்செவியுடல் நடுவில்கண்ணனைக்கண்டு
கலங்கியென்செய்வதென கரங்களைக்கொண்டு
வயிற்றைப்பிசைந்துமதிவதனத்திற்சாடி
வாட்கண்ணசோதையை வளைத்தழுதவாடி
எம்பிரானோடே நாமிறந்திடுவோமென்று
இழிகையிற்பலதேவ ரிதுமெத்தநன்று
ஆபத்சகாயனுக்கசை வொன்றுமில்லை
ஆத்திரப்படுவதா லாவதொன்றில்லை
என்னவுங்கோபியரோ டிண்டர்களெல்லாம்
இதுவுமொருலீலைதா னென்றிருப்பதெல்லாம்
காணார் நறுந்துழாய்க்கண்ணனுங்கண்டு
கலங்குபவர்துயர் நீக்க கருணை மேற்கொண்டு
அச்சுதன்றிருமேனியதிகம் பெருக்க
அப்பொழுது காளிங்கனவ் வுரு பொருக்க
முடியாமல் சுற்றெனுமுறைக்கதைவிடுத்து
முடித்திடுவோமென்று படமுனிவாயெடுத்து
எண்ணரிய கடுவை நாசியின் வழிவிடுத்தான்
எம்பிரானவனை யவலீலையா யெடுத்தான்
மாய்க்கமனதின்றியே வாலதைப்பற்றி
மண்குயவன் சக்கரம்போல்மா விரைவாய்ச்சுற்றி
இடம்வலமாயம்மடு வெங்குமிழுத்தோடி

இன்புடனே திருநடன மியற்றமனம் நாடி
கனவிஷக்காளியன் கம்மேறி நின்றார்
கரமொன்றால் வால் பற்றி கனித்து நடிக்கின்றார்
நடனத்தினதிசயம் ராஜனே கேட்பாய்
இராகதாளம்மந்த நடனத்தின் சேர்ப்பாய்
அலைகளேம்ருதங்கமாகவும் நல்ல
அம்ஸாதிசுட்டிசுரமா மெனச் சொல்ல
சன்மார்க்கமுளதேவர் சபாஜனங்களாக
சர்ப்பசிரம்ரத்நசபா மண்டபமாக
நடனமது செய்யவுடனடுக்கத்தினாலே
நாகேந்திரன்கதறி நலியமென்மேலே
வானவரெலாம் புஷ்ப மாரியைப்பொழிய
வன்விஷக்காளிங்கன் மமதையெலாமொழிய
ஆயிரஞ்சிரங்களி லொன்றாயினும் விடாமல்
அப்சரமாதர்கள் அபிநயங்கெடாமல்
கருதரிய நடனமாய்க் களித்துவிளையாட
கான்றும் வாய்களின் ரத்தங்கானாறாயோட
பலஹீனனாகியே பலதிக்கும் நோக்கி
பாலனென்றெண்ணியதோர்பர்வகம் போக்கி
எம்பிரானடிகளிலெழில் முடிகள் தாழ்த்த
இறைவனுக்குண்டான இம்ஸையைப்பார்த்த
காளிங்க பத்நிகள் தோத்திரக்கடலில்
கருணையொடு களிப்பாய்கா லாழ்ந்துதையாகப்பல் (எ)

(௰௧)

உரகேந்த்ரன் பத்நிகளை கருணையுள்ளவராய்க்கிருபை செய்ய
கரமுடைய காளியனும் மிக்க காதலுடன் ஸ்தோத்தரிக்க.

முடுகு:—உரகேந்த்ரனே யிந்த வுயர் மடுவை விட்டு
ஒழியும் ரமணகம்நோக்கி உவணன்பயம் விட்டு
என்னவும் நீலோற்பல வெழில்மாலைகொண்டு
இணைப்பாததாமரை சேர்த்தேத்தி விடைகொண்டு
காளிங்கனும்புத்ர களத்திரர்களுடனே

கால்வாங்கினான் ரத்நாகரத்தீவிலுடனே
என்னவும் பரிக்ஷித்துயேர் பெற்றமுனிவ
இப்பூர்வ சரிதையை யியம்புமெனவினவ
காளியன்கருடனிட கலகமுதலாக
காயாம் பூவண்ணன்கடாட்சமீறாக
ஒன்றும்விடாமலே வுயர் முனியுஞ்சொல்ல
உத்தராநந்தனன்கேட்டு கந்துமேநல்ல
தையனேயநந்தர மருள்கவெனவேண்ட
அப்பனிடசரிதை முனியரசையகந்தூண்ட
ஆனந்தமாகவேயருளுவாரரசே
ஐயனுங்கரையேற வாய்ப்பாடியரசே
முதலான வாயர்கள் முதங்கொளவசோதை
முத்தங்கொடுத்துயர் முளரியின் போதை
ஒத்தகரசரணத்தை யுடைய வென்னையா
உன்மீது மரிவிஷ முமிழ்ந்ததாதய்யா
இன்றுமுதலித்துட்ட வேலையியற்றாதே
எழைகள் மனங்களுக்கேதம்வையாதே
என்றுபலவார்த்தைகளிரசமொழுகசொல்ல
எழுபுரவித்தேரோனுமேலத்திசெல்ல
ஆயர்கள் கூட்டம தடங்கலுமுறங்க
அடவியனல் கொடுமையுள தாயொளிபிறங்க
வரக்கண்டகோர்பாலர் மாயனைப்பார்த்து
வாய்குளரிக்கொண்டு வாடிமெய்வேர்த்து
ஆபத்சகாயனே அபயமபயம்
அம்புயக்கண்களாலருளும்மிச்சமயம்
என்று சொலியவர்கள் படுமேதத்தைக்கண்டார்
எரிந்துவருமக்கினியை யிமைப்போதிலுண்டார்
கோகநகநண்பனுங்குணதிசைப்போந்தார்
கோபால கூட்டங்கள் கோகுலஞ் சேர்ந்தார்
அதிமனோகரமான வசந்தத்திதனிலே
அதிவுசிததிருநடன மாடுதையாகப்பல் (எ)

(௰௨)

பந்தமதைநீக்குமையன் பசுக்கள்தனைப் பழுவமதில்மேயவிட்டு
விந்தையுடன் பலவிதமாய் விளையாடுஞ்சமயமதில்

முடுகு:—பிரலம்பா சூரனவன் பேரழகுடைய
பிள்ளைபோல் கோபாலர் பெருந்திரளிலடைய
பகையாளிகுடியையுடன் பழகிக்கெடுக்க
பகருமுரைப்படியப்பாதகனை முடிக்க
எண்ணிகோபாலர்களை யிருகூறுகண்டு
இதம்பேசிதன்பக்கல் இராக்கதனைக்கொண்டு
தோற்றவர்ஜெயித்தவரைத் தோள்மீதுகொண்டு
சுரபிகளைச்சுற்றுவதாய் சூட்சியைக்கண்டு
பந்தாடபைந்துளவோன் பக்கமது தோற்க
பத்தனுந்தாமனைபகவான்றேளேற்க
அலாயுதனை அசுரன்கொண்டந்தரஞ்செல்ல
அநந்தரம் அசுரனை யன்னவர்கொல்ல
அமரர்கள்மலர்தூற்றி யானந்தங்கொண்டு
அந்தரஞ்செலவோர்நாளடவியனல்கண்டு
ஆய்ச்சிறுவர்படுகின்றவஸ்தையைக்கண்டு
அவ்வனலை முற்றவுமதி விரைவிலுண்டு
வாக்குச்சாதுரியகவிவாணர்க்கடங்கா
வருஷசரத்கடலதனில் வளைந்ததையாகப்பல் (௭)

(௰௩)

அதிவுசிதமானசரத் காலமதில் யமுனையிற் புள்ளாங்குழலை
மதிவதனமங்கையர்கள் மகிழ்வெய்த மாதவன் பூரித்திருக்க.

முடுகு:—கோபாலர்தங்களின் குலம்விர்த்தியடைய
குலதெய்வமாகிய குமரியினுடைய
அதிசிலாக்கியமான விரதமநுஷ்டிக்க
ஐந்துலட்சங்குடிநல்லார்க்கு நியமிக்க
அப்படியேதனுர்மாதமையாறு தினமும்
அம்புயக்கண்ணன்மேலாகவேமனமும்

அநுஷ்டிக்கும் நாட்களிலந்தியதினத்தில்
ஆடைகளீனராயச்சம்மனத்தில்
இறையின்றியமுனையிலிறங்கிநீராடி
இருக்கையிலவ்விடம் எம்பிரானேடி
கலைகளைக்கைக்கொண்டு கடப்பமரமேறி
கன்னியரைக்கண்டுபரிகாசங்கள்கூறி
எழுந்தருளியிருக்கின்ற இறைவனைக்கண்டு
இந்தவனியாயங்களெவ்வுலகிலுண்டு
கண்ணாயித்தொழிலை நீ கவனிக்கலாமா
கடையர்கள் கலைகளிலுன்கரம்படலாமா
அம்மான்மகன் நீ நானத்தைமகளென்றும்
அறிவின்றியிவ்வாடலாடினேமென்றும்
பலவிதமாய்க்கெஞ்ச பகவானப்போது
பாவையர்களைப்பார்த்து பகர்வாரிப்போது
சிந்தனைவேறு முங்கள் செய்கைவேறாக
சீர்பெற்றநோன்பிழிகைதிரிபுடமையாக
தெரியவருகின்றதடி திருடிகளே நீங்கள்
சீக்ரம்வெளிவந்துங்கள் சேலைகொடுபோங்கள்
என்னவுங் கோபியர்களீ தென்ன ஞாயம்
யார்செய்வாருன்னைவிடயிந்தவனியாயம்
மாதர்கள் நீராடுமிடம் மானிகள்வாரார்
வந்தாலுமிக்கார்யம் மனதாலுமோரார்
எம்பிரானுன்மாயமெவரறியலாகும்
ஏழேழ்பிறப்புமுனக்கேயடிமையாகும்
எங்களைக்காருமெனவிரைஞ்சிடும்போழ்து
எம்பிரான்பெண்களே யாவருமிப்போழ்து
இயற்றியதுபலிதமே யென்னாணைகொண்டு
என்வீட்டிலெந்தைதா யிசைத்தற்கிரண்டு
செப்பாமல் வேலைகளைச்செய்கிறேமென்று
ஸ்திரமானநம்பிக்கை செய்துநதி நின்று
கரையேறி வந்துங்கள் கலைகளைப் பெற்று
கடுப்பினிலேகுங்களெனசழறியதையுற்று

கேட்டந்த கன்னியர்கள் கெடுதியிதிலென்ன
கிருஷ்ணனதுடமை நமக்கேன் லச்சையென்ன
ஒருமனதாய்க்கரையேறி உற்றுநோக்கிடவும்
உடையீனராயவர்க ளுக்குதோற்றிடவும்
பிரம்மருத்ரேந்த்ராதிபேரட்சிகட்கெல்லாம்
பேதமறவருளியே பெய்வளையீரெல்லாம்
சாஸ்திரவிரோதமாய் தகுதியுளநதியில்
ஜலக்ரீடைசெய்தபிழை தவிரயித்ததியில்
இருகையுமுயர வெடுத்துசேவிக்க
எனவவர்களோர்கரமெடுத்து சேவிக்க
குளிக்கப்போய்சேறு பூசிகொள்பவர்கள்போலே
கொண்டீர்களபசாரங்கூசாதுமேலே
இஃதொழியவிருகரமெடுப்பீர்களென்ன
ஏகமனதாய்ப்பெண்கள் எம்பிரான்சொன்ன
சொற்படிவணங்கியே சுந்தரமுடைய
துகில்களைக்கொண்டுபதி துரிதமுடனடைய
பத்மாட்சன்றமையனொடுபசுக்களையோட்டி
பசும்புற்கள்மேய்ந்தபின்பானீயங்காட்டி
கோபாலகுமார்கள் கும்பலாய்ச்சூழ
குளிர்யமுனையருகுகளிகூறதையாகப்பல்

(௰௪)

கோபாலகுமரரெலாம் வெகு கொடுமையுள பசியதனால்
பூபாரந்தீர்க்கவந்த யிரு புருஷரிடம் முறையிடவும்.

முடுகு,—அந்தணர்பத்நிகள் அன்பாயளித்த
அன்னத்தை சிறுவரொடருந்திக்களித்த
சிலநாளிற்கோவலர்கள் திரளாகக்கூடி
சிறப்புளவிந்திரயாகஞ்செய்யமனம்நாடி
கோகநகைமார்பனுடன்கூடியோசித்து
கோவர்த்நகிரியை குறித்து விசேஷித்து
செய்துமுடித்திடவுமதைதேவேந்திரன் கண்டு
செப்புதற்கரிதான சீற்றமேற்கொண்டு

சப்தமேகங்களையுந்தளையைக்கழித்து
சதிரானவாய்ப்பாடிதன்னையழித்து
வரவேண்டுமென்றுபெருவாயுவோடேவி
வந்தனன்றானும்வா கனமீதிற்றாவி
இறுதிகாலம்பொருவயிடிமின்னலோடும்
ஏகவார்ப்பாடமா யிணையில் காற்றோடும்
காலிறங்கிப்பெருங் கன்மழைப்பெய்ய
கலங்கியே கோபாலர் காலிகளோடைய
செங்கமலக்கண்ணனே செறிந்ததுதீங்கு
தீர்க்கவேறொருவரில்லை தீனர்களைத்தாங்கு
என்று கோவலர்கள்முறை யிடுகின்றபோழ்தில்
யாவரொடுஞ்சென்றையனிமையெனும்போழ்தில்
கோவரத்நகிரியை குடையாகக்கொண்டு
கோவலர்கோக்களுடன் குதூஹலங்கொண்டு
எப்பொழுதும்போலவே யிருந்திடச்செய்ய
இரவுபகலின்றிமழை யெழுதினம்பெய்ய
ஆகண்டலன் பார்த்ததிசயமுற்றான்
அகற்றிபொழில்களையமராவதியையுற்றான்
எழிற்பெரிய குன்றதனையிருந்தவிடம்காட்டி
எப்பொழுதும் போலவெழுந்தருளினது கப்பல் (எ)

(௰௫)

மனமுவந்தநந்தன்முதல்மற்றவரும்மணிவண்ணன்றன்னுடைய
கனமுடைய லீலையெல்லாம் ஒவ்வொன்றாய்க்களித்து துதித்
[திருக்க

முடுகு:—ஆகண்டலனும் மதியச்சமடைந்து
அருங்கர்மதேனுவோடன்பாயடைந்து
அம்புயக்கண்ணனவ ரடிகளிற்பணிந்து
அறிவின்றிகோதுக்குள்ளானேனென்றணிந்து
என்றுரைத்துக்காமதேனுவினாலே
இயற்றியபிஷேகமவரெழில் சென்னிமேலே
கோதற்றமுடிசூடிகோவிந்தனென்று

கூறியேவிடைகொண்டு குதூஹலனாய்ச்சென்று
சுகித்திடயமுனையில் துவாதசியினன்று
தனுக்குற்றநந்தனை துயரத்தினின்று
ரட்சித்துயமுனையில்நந்தகோபாலன்
நற்றவப்பயனான நயகுணசீலன்
சரத்காலபூரணச்சந்த்ரோதயத்தில்
சராசரமுதலாய் தழைத்தகானத்தில்
உள்ளதெல்லாமுருக வொண்பவளவாயில்
உசப்புடன்வேய்ங்குழல்வைத் தூதுந்தறுவாயில்
பஞ்சலட்சங்குடிப்பாவையர்க்குற்ற
பாசமென்சொல்லுவேன்பரிக்ஷித்தேமுற்ற
துறந்தோர்களாலுந் துறக்கொணாமோக
தொல்லுலகினின்பந்துறந்துமனமேக
கன்றுகளைவிட்டுபால் கறந்திட்டார் சிலபேர்
கறப்பதற் கர்யத்தஞ் சிலர் கறக்கின்றார் சிலபேர்
கன்றைமறுகால்விட்டு கட்டினார் சிலபேர்
கட்டுவாரொடுகட்ட கருதுவார் சிலபேர்
கறந்திட்டபால்களைக்காய்ச்சினார் சிலபேர்
காய்ந்தபாலிறக்கசிலர்கவனிப்பார் சிலபேர்
குழந்தைகட்குப்பாலன்னங் கொடுத்தார்கள்சிலபேர்
கொடுக்கின்றாரொடு கொடக்குறித்திட்டார் சிலபேர்
புருஷர்கட்குபசாரம் புரிந்தார்கள் சிலபேர்
புரிவோருடன் புரியப்போகிறார் சிலபேர்
அறுசுவையுண்டிகளை யருந்தினார் சிலபேர்
அருந்துவோருடனருந்த லானார்கள் சிலபேர்
சுரிகுழலிற்புஷ்பங்கள் சூட்டினார் சிலபேர்
சூடுவோருடன் சூட துவக்குவார் சிலபேர்
ஆபரணம் நன்றாயணிந்தார்கள் சிலபேர்
அணிவோருடன் அணியலானார்கள் சிலபேர்
சிற்றுண்டிவினியோகஞ் செய்தார்கள் சிலபேர்
செய்வோருடன் செயவுத் தேசித்தார் சிலபேர்
இருகண்களுக்கு மை எழுதினார் சிலபேர்

எழுதுவோருடனெழுத வெண்ணுவார் சிலபேர்
தனங்களிற் கலவை முசற்றடவினார் சிலபேர்
தடவுவோருடன் றடவுஞ்சந்தர்ப்பஞ் சிலபேர்
உடைகளைச்செவ்வையாயுடுத்தினார் சிலபேர்
உடுத்துவோருடனுடுத்தவுள்குவார் சிலபேர்
சொகுசுளமுன்றானையைச் சொருகினார் சிலபேர்
சொருகுவோருடன் சொருக துவக்கினார் சிலபேர்
இவ்விதமிருக்கின்ற வேந்திழைகளடைய
ஈடுயர்விலாதொளிரு மெம்பிரானுடைய
திருவேணுகானமிரு செவியின் வழிநுழைய
தீங்கரும்போன்சரம் சேடியர்மார்நுழைய
அந்தந்ததொழில்களையப்படியப்படியே
அறுதியாய்விட்டரியினம் புயவீரடியே
தஞ்சமாய் நம்பித்தகப்பன் முதலானோர்
சகைந்தும்மதியாமலே தனிமருளதானோர்
போலவிடை தள்ளாட பொன்னின்கலசத்தை
பொருவுமிருதனமசையபொழிற்கருநிறத்தை
அனையவளகங்கள் அவிழ்ந்து சோர்ந்திடவும்
அணிந்திடும் மேகலைகள் அப்புறமாகிடவும்
ஆர்த்தைகளாயமுனைமணலணிமேட்டிலோடி
அம்ஸங்கள்கூட்டம் போலணியணியாய்க்கூடி
இருக்கின்றபெண்டுகள் யாவரையுங்கண்டு
எம்பிரான்முறுவலாமிளநகைக்கொண்டு
கோபியர்களே யிந்தகுறையெங்கேயுண்டு
கொழுனன் முதலானோர்கள் கூறுவதைவிண்டு
இராக்காலந்தன்னிலே ராட்சதிகளென்ன
இறையேனும் நாணமுதலில்லாதோரன்ன
கும்பலாய் வந்ததுக்குற்றமே நீங்கள்
கூடிய சீக்கிரம் கோகுலம்போங்கள்
துடியிடையார்கட்குச் சோரத்தால் நேரும்
துன்பத்தை கேளுங்கள் சூழ்ந்த அனைவோரும்
நாயகனறிந்திட்டால் நடந்திடுங் கொலைகள்

நற்றாயர் தந்தைக்கி நாணிடுந்தலைகள்
தமையனோடு தம்பியர்கள் சௌரியங் கெடுவார்
தானீன்ற பிள்ளைகள் தாட்சண்யம் விடுவார்
ஓரகத்திமார்கண்டால் உலகில் தூற்றிடுவார்
உதவியுளபந்துக்கள் ஒதுக்கியே விடுவார்
அரசனறிந்திடுவானே லாக்கினை யுண்டாம்
அவனிதனிலுள்ளவர்க்கருவருப்புண்டாம்
மாமனார் மாமியர்க்கு மானக் கேடுண்டாம்
மன்னவர்கள் சேவகரால்மா காவலுண்டாம்
என்றினும் நீதிகளை யெவ்வளவோகொண்டு
இடித்தவர்கள் மனவுறுதியின்றன்மைகண்டு
ஒவ்வொருத்திக்குமொவ் வோருருக்கொண்டு
ஒண்டொடியார் தங்கள் மேலுவகையதுகொண்டு
அதிமந்தகாசச்சுந்த்ர வதனாரவிந்த
ராகவேபுன்சிரிப் பதுகொண்டுகந்த
மதிசமுளமுல்லை மலரணிந்தொருத்திக்கி
அளகபாரங்களை யணிசெய்தொருத்திக்கி
மழைக்க ணொருத்திக்கி நுதன்மயிரொதிக்கிடுவார்
வதனசிறுவியர்வையோர் பெய்வளைக்கொதிக்கிடுவார்
தேசுடையவொருத்திக்கித் திலதப்பொட்டிடுவார்
தேன்மொழியொருத்திநகை சிக்குவாங்கிடுவார்
சேல்விழி யொருத்திக்கிச் சேலைகட்டிடுவார்
திருவனா ளொருத்திக்கிச் சிரிப்புகாட்டிடுவார்
தடங்கணா ளொருத்திக்குத் தலையணி யணிவார்
தையலாளொருத்திக்கி தாளணி யணிவார்
கரபூஷணங்களொரு கன்னிக்கியணிவார்
கயற்கணாளொருத்திக்கி கச்சைகொண்டணிவார்
எந்திழையொருத்திக்கி யிடையணியணிவார்
எற்றமுளவகிற்சாந்தோ ரின்மொழிக்கணிவார்
கோமளக்கொழுந்தே யுன்கொங்கைகளைக்கண்டு
கோகநகமொக்குகள் கூச்சமது கொண்டு
தலைவிரிகிற தென்றோர் தையலைப் பார்த்து

சந்தமலர் குழலுக்குச்சரியின்றிநேரோத்து
ஒமிஞ்சுல் மேகத்தையுற்றுப்பாரென்றும்
ஒருத்தியைப்பார்த்துவொண் டொடியாளேதுன்றும்
எாருன்கரசரணமென்பவயைக்கண்டு
இளந்தளிரொலாமிக வேக்கமதுகொண்டு
மாமிகளே கண்டபுது மணமகளை யொப்ப
வணக்கமுறுகிற தென்றுவார்த்தை பல செப்ப
மாதர்கள் மாதவன் மயங்கினனென்றும்
மனக்கர்வமடையவம்மாதர்களினின்றும்
கர்வப்படாததோர் கன்னியின் சகிதம்
கணத்தினில் மாயமாய்க் கரந்துதையா கப்பல். (எ)

(யிகூ)

அருட்கமலக் கண்ணனவர் அந்தர்த்தானமதாய் மறைந்தவுடன்
கருவமுற்றகோபகுல கன்னியர்கள் கானமதில்திகைத்தவராய்.

முடுகு:—தாவரங்கொடிகளிளந் தளிர்களைப்பார்த்தும்
தண்ணதிகளொடுபல தடாகத்தைப்பார்த்தும்
அம்ஸமுதற் பட்சிகளை யார்வமுடன் பார்த்தும்
அரிமுதலா மிருகங்க ளானதைப் பார்த்தும்
காயாம்பூவண்ணனைக் காண்கிலிரோ நீங்கள்
கண்டிருந்தாற் கழறி கவலைதீருங்கள்
என்றிவ்விதஞ் சொல்லி யேங்கிக்கதறி
எம்பிரான் றிருவடிகள் எதிர்கண்டு பதறி
பார்த்தீர்களா யிதோ பகவான் பதங்கள்
பக்கமதிலெங்கணும் பரவிபாருங்கள்
என்றுசொலி யிளமையில் எம்பிரான் செய்த
இணையற்றலீலைபல வியற்றிமகிழ்வெய்த
கண்ணபிரான் முன்வந்த கன்னிமகிழ் வெய்த
கானத்தில் பலலீலைகளி கொண்டு செய்த
பட்சத்தைப் பார்த்தந்த பாவையுந்தன்னை
பகவான் மதித்ததாய் பாவித்து யென்னை

எடுத்தேகுவா யெம்பிரானே யுனக்கு
இஷ்டமுள விடத்தனி லினிமேலெனக்கு
நடக்கமுடியாதென னளினாட்சன் கண்ணே
நலமுடனமரு மென்னற்றேளிற் பெண்ணே
எனவுமப்பெண்ணேறி யேங்கவும் நின்று
எம்பிரான்மாயமா யெழில்யமுனை சென்று
ஏற்றமப்பெண்களுக் கெதிராக தோற்ற
எம்பிரானைக்கண்ட வேந்திழைகள் போற்ற
ஏந்திழையொவ் வொருத்திக்கோ ரெழிலுருக்கொண்டு
இணையிலாராஜக்ரீடை யேமாப்பாய்க் கொண்டு
ப்ரம்மமுகூர்த்தஞ் செல்லபெண்களுடன் கூடி
பெட்புடன்கோகுலத்திற்குப்பெயர்ந்தனையாசப்பல்(எ)

(௰எ)

அநதரமோர்நாளையிலே ஆயரெலாம் அம்பிகா வனமதிலே
மனமுவந்துபூசைசெய்ய நந்தனை மலைப்பாம்பு விழுங்கையிலே.

முடுகு:—வேதமுதல் வனுமந்த வெவ்வினைப்போக்கி
வேணுவால் மயங்கியவேல் விழயரைத்தூக்கி
சங்கருடன்செல்ல சடிதியிற் கொன்று
தலையிலுளரத்னமொடு தன்னகர்ச் சென்று
சிலநாளி லரிஷ்டட்ட னெருதாய்வரக் கண்டார்
தேவர்கள் வாழ்த்திடவவனை சீக்ரம்வதை கண்டார்
இங்ஙனம் இது வாசயாழ் முனியினலே
இராமகிருஷ்ணன் சரிதையறிந்தச் சத்தாலே
அக்ரூரரைக் கம்ஸனுர் வமுடனேக்கி
அதிசவிரைவுடனயர்ப் பாடியைநோக்கி
சென்றுமேராம கிருட்டினர்களனுமந்த
சிறுவர்களிருவரையுந் தேர்மீதுமுந்த
ஏற்றிமற்றோர்களுக்கென் மொழியிசைத்து
இக்கணம் வருகவென வெழிற்சிர மசைத்து
அக்ரூரர் தேர்தனை அலங்க்ருதஞ் செய்ய

அரக்கனுங் கேசியாய்ப் பாடியிற்றுய்ய
செம்பவளவாயன் மேற்றேசியாய்ச் சென்றான்
திருடனைக்குடல் பற்றிசீக்கிரங் கொன்றான்
அநந்தரம் நாரதர் அச்சுதனைக் கண்டு
அதிகுஹியமாயினி யேலாஞ்செயலைவிண்டு
விடைகொண்டு வீணையை மீட்டியே செல்ல
மேன்மையுள கோக்களொடும் வேய்ங்குழலோன் நல்ல
ஆய்ச்சிறுவரொடும் மலையடிகளிற் சென்று
ஆநந்தமாக விளையாடுவோ மென்று
ஆடுகளாயர்க ளமைச்சர்கள் போலும்
ஆடெடுக்குங் கள்ளரோடரசர்கள் போலும்
விவகரித்துக்கொண்டு விளையாட மட்டி
வியோமாசுரனங்கோர் விடலையாய்க்கிட்டி
கோபலரைக்குகையிற் கொடு சேர்க்கக்கண்டார்
கொடியோனைக்கொன்று கோபாலர்களைக் கண்டார்
அமரர்கள் போற்றிட வதி மேன்மையுடனே
ஆய்ப்பாடி சேரவு மதி யாவலுடனே
கம்ஸனிட சோறுண்ட கடையேனு மின்று
கண்ணனைக்காணும் விடிவைக்கண்டேனே யென்று
அச்சுதன்றனை நினைந் தானந்தமாக
அதிவுசிதமுளதேரி லதிவேகமாக
ஆய்ப்படி தனிலுள்ள அருங்கப்பல் காண
ஆவலுடனொரு கப்பல் அங்கேகு தையா. (எ)

(மஅ)

அதிதுரிதமுடன் சென்றுஅக்ரூருமாய்ப்பாடிதனையணுகிடவும்
ததிபெற்ற இராமகிருஷ்ணுள் கோ தூளியினுல் நிறம்பியதோர்

முடுகு:—திருமேனியுடையராய் சேவை சாதித்தார்
தேரிழிந்த க்ரூரர் சென்று சேவித்தார்
அவ்விருவர் தங்களின் அருளைமேற் கொண்டார்
அரசனும் நந்த கோபாலனைக் கண்டார்

சயித்யோப சாரங்கள் சகலமுங் கொண்டார்
சப்ரகூடமஞ்சத்திற் சயனித்துக் கொண்டார்
அப்பொழுது கண்ணபிரானன் னவரைக்கண்டார்
அகிலக்ஷேமங்களையுமாராய்ந்துக்கொண்டார்
கம்ஸராஜன் உட்கருத்தையுங்கண்டார்
கண்டகன்யாகத்தை பிதாகளிகூறவிண்டார்
அரசனும்நந்த கோபாலன் மொழியேற்ற
அணிககரோரவ்வரசோடவ ரவர்க்கேற்ற
மரியாதை யோடுவட மதுரையை நாடி
வழிக்கொளக்கோகுல மாதர்கள்கூடி
அக்ரூரர்திருத்தேரையணிசெயக்கண்டு
அம்புயக்கண்ணன்பிரிவாற்றாமைகொண்டு
சதுர்முகன்செய்ததொருசதியிதுவாமென்பார்
சரஸ்வதிதேவியிடஞ்சாற்றலாமென்பார்
அக்ரூரரென்னும் பேராரிட்டாரென்பார்
அல்லவிவர்க்ரூரரே யாகுமடியென்பார்
இப்படியனேகவிதவிழி மொழிகள் விண்டு
இஷ்டதெய்வப்ரார்த்தனைகள் யெவ்வளவோ கொண்டு
ஏக்கமுறும் பெண்களை யெம்பிரான் கண்டு
இதோ வருகிறேனென்றிசைத்து விடை கொண்டு
தமையனர்சகிதராய்சம்ப்ரம்மமுடனே
தனித்திருத்தேரமர்ந்தநிவேகமுடனே
வடமதுராபுரி நோக்கிவழியதனைக்கொண்டு
வளமானயமுனைக்கரைவந்ததையா கப்பல். (எ)

(ருக)

யமுனையருகடைந்தவுடன் இராமகிருஷ்ணருள்இரதத்தைவிட்டுக்
[கீழிறங்கி
யமுனையிலோர் பிரிவான காளிந்தி யாம்நதியிற் சென்றிழிந்து.

மூதே:—ஆயகாசரணமதைசோதித்துக்கொண்டு
தூய்மையுளதீர்த்தமதைச்சுகமாயுட்கொண்டு
தருநிழலிற்றங்கியே சற்றிளைப்பாறி

சந்தோஷமாகத்தனித்தேரிலேறி
அக்ரூர்தன்னையனுப்பவவர் நதியில்
அநுஷ்டானத்தோடு நீராடுமத்ததியில்
கண்ணன்பலராமனையுட் கண்டுகரையேறி
கண்டரத மீதினில் காதலதுமீறி
அநந்தரம் நீராடியங்ஙனங்கண்டு
அங்குமிங்கும்மாயலைந்துதிடங்கொண்டு
ஐயமதசற்றிநீராடினவராக
அரிமந்தனுஞ்சர்வாலங்க்ருதராக
சேஷசயனத்தினிற் சேவைசாதிக்க
சிந்தைமகிழ்ந்தக்ரூரர்தெளிந்து சேவிக்க
அவ்வுருவமறையவும் ஆச்சரியமுளராய்
அக்ரூரரும்நல்லனுஷ்டானபரராய்
திருத்தேரமர்ந்து தான் றீர்த்தமதிற்கண்ட
செப்புதற்கரிதானசெய்கைமேற்கொண்ட
சரிதையைசொலக்கேட்டுசோர்ந்துமே ஊரை
சர்ச்சனர் தங்களொடு தந்தை முதலோரை
கண்டுபூங்காவினில் கழிக்கவவ்விரவை
கம்ஸனிடம்பலராமகண்ணர்களின்வரவை
அக்ரூரர் சொலமறுநாளந்தி காலத்தில்
அண்ணனொடுகண்ணபிரானன்பர்களிடத்தில்
விசுவாசமுடையாராய் விண்ணுலகுபோலும்
* விந்தையுளவடமதுரை வீதியொருநாலும்
பவனிவருகையிலந்த பட்டணத்துள்ள
பாவையர்கள்பகவானை பார்க்கமனந்தள்ள
ஒரு கண் தனக்குமையுகந்தெழுதுவோரும்
ஓர் செவிக்கணிகளால் ஒப்பனைசெய்வோரும்
காற்களுக்கணிவதை கரத்திலணிவோரும்
கரங்கள் தனிலணி வதைக்காலி லணிவோரும்
இவ்விதமனேகவித வேற்பாட்டிலேறுடும்
இருப்பவர்தங்கட்குமுன் னெழுந்திருந்தோடும்

---

* மாடவீதிநான்கு என்றுணர்க.

பெண்களைத்தள்ளியே பேரவாக்கொண்டு
பெருநாணமுதலியதைப் பின்னாகவிண்டு
சென்றுதிருவீதியிற் செல்வர்களைக்கண்டு
சேவித்துவிழிகளால் திருவழகையுண்டு
ஆய்ப்பாடிபெண்களின் அருந்தவம்போலே
யார்செய்யவல்லவர்க ளெம்புவியின்மேலே
என்றுமதுராபுரியோ ரேத்தவிருவோரும்
எகையிற்கலைகளொடு மெதிராகநேரும்
வண்ணானைக்கண்டு மணிவண்ணனன்பான
மாமன்நற்கலைகளில் மாவெண்மையான
உயர்வானகலைகளை யுதவுவாயென்று
உபாயமாய்க்கேட்கவவனே கோவிது நன்று
மகுடமன்னவரணியும் மாட்சிமையதான
வடிவுள்ளகலைகளிது மதியிலிகளான
மாடுமேய்ப்போர்க்குவாய்க் காதென்றுசொல்ல
மணிவண்ணனட்சணம் வண்ணானைக்கொல்ல
அவனுடன்வந்த வண்ணாரெலாமிந்த
அதிசயங்கண்டச் சராய்கொண்டுவந்த
மூட்டைகளைப்போட்டோட முகில்வண்ணன் கண்டு
முதற்றரக்கலைகளை முளரிகைக்கொண்டு
தோழர்க்களிக்கவோர் துகில்நெய்வோன்கண்டு
தூய்தானசுந்த்ர நவத்துகில்களைக்கொண்டு
இருவர்க்குஞ்சாற்றியரு ளேற்றிலஞ்செல்ல
எம்பிரான்றமைய னொடும்யாவர்க்கு நல்ல
மாலாகாரன்அரண் மனைசென்றுநல்ல
மணமாலைகொண்டுதெரு வழியாகசெல்ல
கம்ஸனுக்கதிமணக் கலவைகள் கொண்டு
கடுகிவருங்கூனியாங் கணிகையைக்கண்டு
சந்தனம்வேண்டச் சமர்ப்பிக்கப்பெற்று
சரீரங்களிற்பூசி சந்தோஷமுற்று
அன்னவள்கூனைப்போக்க வதிமோகங்கொண்
அம்புயக்கண்ணன்மே லணிதானைக்கொண்டு

கஞ்சாடைகாட்டுமக் கணிகையைக்கண்டு
காதல்தணியப்பின் கலப்பதாய்விண்டு
தாஷ்டீகராய்சென்று தனுசதைமுறித்து
தந்தைமுதலானோர்கள் சார்பைக்குறித்து
சென்றுமேல்விளைவெண்ணி தேசுற்றிருக்க
திறலுடையகம்ஸனெனும் தீயவன்பெருக்க
தக்ககரமுடைய துற்சொற்பனங்கண்டு
துக்கத்தைவிட்டசத் துணுக்கமதுகொண்டு
சாணூரமுஷ்டிகரை சமர்க்குநியமிக்க
தாமோதரனுந்தன் றகுதிச்கித்தக்க
பலராமசகிதராய் பாங்குடன்செல்ல
பதினாயிரங்களிறு பலம்பெற்றவல்ல
குவலயாபீடங் குறுக்கிடக்கண்ட
கோவிந்தனும்மடா குருட்டுமதிகொண்ட
பாகனே யானையைப் பாதையில்நின்றும்
பக்கமாயோட்டாயேல் பதைத்துயிர் பொன்றும்
என்னவப்பாகனும் ஏர்பெற்றதான
இம்மடியைமேலேவ வெண்ணற்கரிதான
அற்புதலீலைகள் ணந்தம்நடத்தி
ஆனையைப்பாகனோ டவனியிற்கிடத்தி
குவவுமிருதோளிலதன் கொம்புகளைக்கொண்டு
கூசாமற்செல்வதைக் குரோதமொடுகண்டு
தகைந்துமேயெங்களொடு சண்டைசெய்தின்று
ஜயமுடனேயாசனவை சாலமென்று
எதிர்த்தசாணூர முஷ்டிகர்களென்னும்
இருவரொடுந்துணைவரை யிருவருமேதுன்னும்
மல்யுத்தஞ்செய்துமே மடித்ததிவேக
மாக்வேகம்ஸன்றன் அவைநோக்கியேக
அப்பொழுதுகம்ஸனு மதிபயங்கொண்டு
அகற்றுங்களவ்விருவ ராஸ்திகளைக்கொண்டு
தளைசெய்துநந்தனை சதிசெய்குணமுடைய
தந்தைவசுதேவனொடச் சார்பினர்களுடைய

சிரங்களையிட்சணஞ் சேதிப்பீரென்று
செப்புமொழிசெவியேற்ற ஸ்ரீதரன் கனன்று
சிம்மாதனந்தன்னிற் சேண்வழிகுதிக்க
திறலுடையகம்ஸன் மனத்திற்பயமுதிக்க
அவனியிற்குதித்துதெய் வாவேசன்போலும்
அதிகவிசையாய்க்குயவ னாழியைப்போலும்
கேடயஞ்சுற்றுகையில் கிளர்மணிமின்னும்
கிரீடத்தைதள்ளியே கேசவன்றானும்
தலைமயிரைப்பற்றியே தரையதனிற்றள்ளி
தாருமாறாய்ரத்த தாரையதுதுள்ளி
சிதறச்செருக்களஞ் சேரென்றுவீச
திறலுடையகம்ஸனுந் தீதானபாச
பந்தமதைநீக்கிடும் பைந்துளவனுடைய
பதாம்புஜங்கள் சேரவப் பார்மன்னனுடைய
இளைஞர்களெண்மரு மெதிர்த்திடக்கண்ட
எழிற்பலபத்திர ரிருப்பாகக்கொண்ட
அலாயுதத்தாலவரை யதமாகச் செய்தார்
அமரர்கள் மலர்மழை யானந்தமாய் பெய்தார்
அன்னவர்கள் மனைவிகளை யாற்றிகடனாற்றி
அன்னைதந்தையர்தளை யகற்றியேபோற்றி
மாதா மகற்குயர் மணிமுடியை சூட்டி
மாசுதர்ம மருளியுற வானவரைக் கூட்டி
தேவகிவசுதேவர் சேயர்கள் யாமென்று
தெரிவித்து சாந்தீப தேசிகன் பாற்சென்று
கலைகளைக்கசடறக் கற்றுவிதீர்ந்த
கான்முளையை தட்சணையாய் காட்டகளிகூர்ந்த
அந்தணரால் மங்களா ஸாசனங்கொண்டு
அணிநகர் சேர்ந்துத்தவரு மன்பரைக்கண்டு
கோகுலமனுப்பியே குசலமதுணர்ந்து
குப்ஜைக்குவருகையிற் கூறியதுணர்ந்து
அங்கு சென்றன்னவ ளவாவினைத்தீர்த்து
அக்ரூரர் மாளிகைக் கம்பொனடி பேர்த்து

எழுந்தருளவக்ரூரர் இணையிலுபசாரம்
இயற்றித்துதிக்கவெம்பிரான் சற்றுநேரம்
பொறுத்து அக்ரூரரைப் புகழ்பெற்றவத்தி
புரிக்கேவவன்னவர் போயவ்விடத்தி
லவர்கள் க்ஷேமமுதலகிலமுங்கண்டு
அம்புயக்கண்ணனிட மனைத்தையும் விண்டு
சந்தோஷமாய்ச் செலத் தமையனுருடனே
தருதியுளம் துரையிற் றங்கினது கப்பல். (௭)

(௨௦)

எம்பெருமான் றமையனுடன் இந்தவித மெழுந்தருளசராசந்தன்
தம்முடையபுதல்விகளால் கம்ஸன் சாய்வுணர்ந்துகோபமுடன்

மூடுதே:—இருபதுமூன்றக்ரோணி யெனுஞ்சேனையோடும்
எதிர்க்கவப்படைகளை யெற்றிசதத்தோடும்
பாதகன்றலைமயிரை பலராமர் பற்ற
பைந்துளவனுல்விடு படவெட்கமுற்ற
சராசந்தனுனவன் றவத்திற்குயேக
தடுத்துசிலபேர்சுகர் தனிற்கொண்டுபோக
பதினேழுதரமிதே படைகளைக்கொண்டு
பகைக்கவப்படைகளெலாம் பாழாகக்கண்டு
பதினெண்ந்தரமதே படையொடுமுக்கோடி
பாதகமிலேச்சரெனும் படைகளொடுங்கூடி
காலயவனன்வரக் கண்ணபிரான்கண்டு
சடுப்பினிலேவிஸ்வகர்மனைக்கொண்டு
துவாரகையைச்சிருஷ்டித்து தொன்மதுரையோரை
சுகமுறக்குடியேற்றித்துங்கமுள தேரை
விட்டிழிந்துபார்தனில் வேகமாயோட
வெய்யனுந்துய்யனைவிடேனென்றுவோட
முகுந்தனும்முசுகுந்தன் முழைபினிற்புக்க
மூடன்முசுகுந்தனை முகுந்தனென்றுதைக்க
நித்திரைசெய்வோ ரெழுந்சனீருக
நிமலனுமவர்க்கருளி நிர்மூலமாக

படைகளைவதைக்கமுன் படையளவுகொண்டு
பலமானமதுரையில் பரவிடக்கண்டு
மணிவண்ணனும்வெள்ளை வண்ணனொடுகூடி
மறைந்திடக்கோமந்த மாசைலமோடி
பாவிசராசந்தன்பின் பரிகசித்தோடி
பதினொருயோசனையும் பார்த்து மனம்வாடி
அம்மலையைச்சுற்றிலுமக்கினியை மூட்டி
அழிந்தார்களென்றெண்ணவப்படையை வாட்டி
மதுரையைச்சேரவவன் மனைசென்றயேங்க
மண்பொதுத்தந்தையால் மயக்கமது நீங்க
ஆநர்த்ததேசத்துக்கரசன்றன்னுடைய
அழகானகன்னியுடனந்தமிகவுடைய
திருத்வாரகாபுரியைசேர்ந்து தேசுடைய
திறற்பலதேவர்க்குமணஞ்செய்துநகரடைய
அனந்தரம்பீஷ்மக வரசனவன்முன்ன
மாற்றியதவத்தினாலருமருந்தென்ன
உதித்தோங்குருக்மணியை ருக்குமிமிகுந்த
உதாரணைச்சிசுபாலனுக்குயெகுசொந்த
மாஙமணஞ்செயநினைய வன்னைருக்மணியும்
ஐயுற்றந்தணர்வசம் அருந்துளவணியும்
செங்கமலகண்ணற்குசெந்திரிகங்காட்ட
சிசுபாலன்முதலோரை சிதறவடித்தோட்ட
ஆலாயுதன்முதலோர்பின்னாகரதமீது
அழகார்குண்டினபுரத்தையடுத்ததையா கப்பல். (எ)

(உக)

பைந்துளவோன்செல்லுமுன்னேசிசுபாலன் முதலரசரெல்லாம்
ஐந்தவித்தோர்மகிட்சியுறும்பீஷ்மக அரசனிடசபைசேர்ந்து

முடுகு:—அரசனாலுபசாரமகிலமுங்கொண்டு
அமரவிவ்விருவரும் அதற்குமேற்கொண்டு
எழுந்தருளகௌரியையேத்திமகிழ்வுடனே
இதுளையர்களோடு வருமெழில் முல்லையுடனே

தரஞ்சொல்ல நாணுறுந்தந்த பந்திகளும்
தனங்களெனுங்கிரிகளாற் றள்ளாடிதுவளும்
இடையளாய்க்கார்மேகமேங்கி யிறைந்தோடும்
இருளுற்றவளகமுடனிருசெவியிணேடும்
போர்செய்யும்போதரியை பொருவுகண்ணினளாய்
புண்டரீகாட்சனைபொதிந்தபுந்தினளாய்
வருகின்ற ருக்மணியை மன்னவர்கள் கண்டு
மயங்கிடக்கார்வண்ணன்மணித்தேரிற்கொண்டு
போகையினிலரசர்கள் பொறாமைமேற்கொண்டு
பொருதவடித்தோட்டியவர்புறமுதுகைக்கண்டு
செல்லருக்கு மிராசசன் சீற்றமதுகொண்டு
சேனையக்ரோணியொடு ஸ்ரீ தரனைக்கண்டு
மூடாயிக்காரியம் முறையாகுமோடா
முதுகுகாட்டாமலென் முன்னிற்பாயோடா
என்று பற்பலவானவிழிமொழிகள்விண்டு
எதிர்க்கவுமையன்றனுசிலேசிலதைக்கொண்டு
எழுமூன்றுசரம்வில் லெடுக்கவுமொடித்து
இரதஞ்சாரதிபரிகள் யாவையுமடித்து
கத்திகொண்டன்னவன் கழுத்தினைக்கொய்ய
கருதருக்மணியவனைக் கார்க்கதுதிசெய்ய
அப்பொழு தணித்தேரிலையன்விவேக
மகன்றவனைகட்டியவலட்சணமதாக
க்ஷவரமதுசெய்துவிடசங் கிருஷ்ணன் கண்டு
தம்பியின்மீது மனஸ்தாபமதுகொண்டு
சகபந்துவாயுயர்சம்பந்தியான
சற்குணவரசனை தகுதியிலதான
காரியஞ்செய்தனையே கற்றறிதுதர்ணு
கண்ணனே யெனக்கழறிகமலைக்குநாணு
விதஞ்சொல்லிருக்குமியை விடவெட்கி பின்பு
வேறுனபோஜகூடம்விரைந்து செலபின்பு
வீர சூர தீர கம்பீரவுதார
விற்பன்னமாரகுபேரவொய்யார

அதிகாரசிகாமணியாமரசனைபெற்ற
அன்னை தந்தையர்முதலதிநெருக்குற்ற
திருத்வாரகாபுரியைத் திருநாடுபோலே
சேடுறச்செய்து பெருசிந்துவொலிபோலே
பதினெண்வகை வாத்தியமும் பண்புடனார்க்க
பங்கயக்கண்ணனும்பல்பேரும்பார்க்க
மாதருக்மணிதனை மறைவிதியைக்கொண்டு
மணஞ்செய்து மற்றுமுளவகையெலாங்கண்டு
என்னன்னையாள் சகிதம் எழில்துவாரகையில்
ஏமாப்புடனே யெழுந்தருளினது கப்பல். (எ)

(உஉ)

பிடியிடையுண்டிலையென்னும் ருக்மணிக்கு ப்ரத்தியும்னன்
[சனித்திடவும்
கொடியசம்பராசுரனவன் கடலில் கொண்டெறியமீன்விழுங்க

முடுகு:—விழுங்கிய மீன் வயிற்கீறி வெளியாகி ரதியால்
வீறுடன்வளர்ந்தவனை வீழ்த்திதன் மதியால்
தனைவளர்த்தவளுடன் றாயிடஞ்செல்ல
தவரிஷியாம்நாரதருஞ் சங்கதியைச்சொல்ல
விதிப்படிமணஞ்செய்து வியக்கபலநாளும்
விஜயபௌத்திரனேவோர் விந்தையைச்சேரும்
எழுபரித்தேரோனிடம்பெற்று தினமும்
எட்டுபாரந்தங்க மீவதொடுகனமும்
உளசியமந்தகமணியை யொளிபெறதரித்து
உயர்சபையில்வருமரசை யுகந்துபசரித்து
எம்பிரான்சாற்றுவா ரெழில்சத்ராசித்தே
இம்மணி யுக்கிரசேனரெழில்மார்பிற்கொத்தே
இருக்குமாகையினாலே யீகுவாயென்றார்
எதொன்றும் பேசாதெழுந்தரசன் சென்றார்
அநந்தரமோர்நாளிலம்மணியால்தன்னை
அணிபெறச்செய்தவன் அறுஜன்வனந்தன்னை
நாடியேவேட்டைக்கி நற்பரியிலேக

நற்சிங்கங் கொன்றவனை நன்மணிகொண்டேக
அது கண்ட சாம்புவாரிமாவைக் கொன்று
அம்மணியைக்கொண்டருங்குகையிற் சென்று
அருங்குழவிதொட்டிற்கு அழகாககட்ட
அரசனம்மணியுடன் ஆருயிர்க்கிஷ்ட
மானதொருதம்பியும் அங்கின்றி வாடி
அச்சுதன்செய்த சதியாகுமென நாடி
நகருளோருடன்கூடி நளினாட்சன்மேலே
நலியாதநிந்தையாய் நவில நம்மேலே
உண்டானதுறை யொழித்திடவேண்டுமென்று
ஊராருடன் கண்ணன் உயர்கானஞ் சென்று
பிரசேனனென்பவனைப் பிணமாகக் கண்டார்
பின்னுஞ்சிலதூரத்திற் பேரரியைக்கண்டார்
அங்குமணிகாணுதெண்கரசனடி கண்டார்
அதன்வழியே சென்றருங்குகையைக்கண்டார்
அவ்விடம் வந்தவரை யமர்த்தி வழி கொண்டார்
அருங்குழவி தொட்டிலினி லம்மணி யைக்கண்டார்
இருபத்தியேழுநாள் இரவு பகலின்றி
இசற்சாம்பனோடுமல்லெனுமுயிர்த் யர்துன்றி
இளையாது செயமுடிவினில் ராமச்சந்த்ரா
ஏழையேன்பிழைபொறுத் திரட்சியுமுபேந்த்ரா
என்றேத்திசாம்புவர் எழில்பெற்றமணிதன்
இடம் வந்த வகைக ளெல்லாமுறைத்துத்தன்
தனையையெனுஞ்சாம்பவதிதன்னைகளிகொண்டு
தண்டுளவோனுக்குத் தனிமணங்கண்டு
கொடுவந்த மணியதனைக் கொடுத்திடவுமுன்னே
குகைத் துவாரத் தடியிற்கூடினவரென்னே.
அதிசயமீதென்றீராறு தினம் பார்த்து
அனுகிநகரதிலபிஷேகச்செலவுசேர்த்து
காளியைப்பூசித்துக்கவலைகள் தீர்ந்து
களிப்புறக்கண்ணனுங் கடிநகர் சேர்ந்து
சத்திரா சித்துக்குச் சங்கதி யுரைத்து

திருதியுளமணியதனைத்தர நம்மிடத்து
உண்டானபழியதை யொழிப்பதற்கென்ன
உபாயமுளதென்றன்னி யொண்டோடியாமன்ன
நடைசத்யபாமையை நலம் பெறச்செய்து
நளினதளாட்சற்கு நன்மணஞ் செய்து
சியமந்தகமாமணியை ஸ்ரீதனமாய்க் கொடுக்க
ஸ்ரீதனம்பின்பாகுமென ஸ்ரீதரன்றடுக்க
சத்திரா சித்தனுஞ் சந்தோஷமாக
தண்டுளவனத்திபுரி தனைநோக்கியேக
அக்ரூரர்முதலியோர் ஆதரணையாலே
அநியாயசத்தன்வன் அழகுமணிமேலே
அவாக்கொண்டவ் வரசன்றனை யறிந்து மணிதன்னை
அபகரித்ததுகண்டு அழுதுயர்மின்னை
பொருவுசத்தியபாமை பொலன்றதங் கொண்டு
போயத்தினுபுரியில் புருஷனைக்கண்டு
நடந்ததைச்சொல வந்து நடத்துவன கண்டு
நற்றமையனுர்சகிதம் ரதமேறிக்கொண்டு
வரக்கண்டக்ரூரரிடம் மணியதனை வைத்து
மாவஞ்சனோடவும் மாயனடம்வைத்து
துரத்திதுஷ்டனைவெட்டிதூயமணியின்றி
துணைவரிடஞ்சேரவவர் தூமுறுவலின்றி
இருக்கையினிலக்ரூரர் எழிற்காசிக்கேக
எம்பிரானன்னைவிட்டிப்பழியதேக
அக்ரூரரையழைத்தம்மணியை வாங்கி
அனைவர்க்குங்காட்டியே ஐயமது நீங்கி
இன்புறச்செய்தக்ரூரர்க்கெழில்மணியைத்தந்து
எழிற்காண்டவபிரஸ்த்தம் எகுதையா கப்பல். (எ)

(உரு)

காண்டவபிரஸ்தமதில் சென்று கலந்தவராய் க்ஷேமமதை
பாண்டு நடுப்புத்ரனுடன் ரதமேறி பங்கயக்கண் எம்பெருமான்.

முடுகு:—செலக்ரீடிவேட்டையால் தீர்த்தவிடாய்கொண்டு
திவ்யாதியாம் யமுனுதீர்த்தமதைக்கண்டு
நீருண்டெயிருவரும் நிழலினிற்றங்க
நேரார்கஜோதியாய் நிற்கின்றதுங்க
முளகன்னியைப்புருஷோத்தமன் கண்டு
உள்ளதைப்பார்த்தனுலுவப்புடன் கண்டு
சூரியன் புதல்வியைச் சுந்தரமிகுந்து
ஜ்வலிக்கின்ற ரதமேற்றி தொன்னகரடைந்து
காண்டவத்தை விஸ்வகர்மனைக்கொண்டு
கடுகவிந்திரபிரஸ்த கடிநகராய்க்கண்டு
காளிந்தியொடுத்வாரகா புரியையக்கண்டார்
கடிமணஞ்செய்துக் களிப்பதிகங்கொண்டார்
அநந்தரமவந்தியெனு மணிநகர்க்கண்டார்
அந்நகரில்மித்ரவிந்தை யாம் பெண்ணைக்கண்டார்
துன்னியவரசர்களைத் துசாகக்கண்டார்
துடியிடையாளைத்தேரிற் றுரிதமுடன் கொண்டார்
தீவிரமதாய்திருத்வாரகையைக்கண்டார்
திருமணச்சடங்குகளைத் திருத்தமாய்க்கண்டார்
ஏராரயோத்தியிலே ழெருதுகளைக்கண்டார்
இலேசாய் ஜெயிக்க வங்கிருந்தோர்கள் கண்டார்
சத்யவதியாம் பெண்ணைத்தனிமணங்கண்டார்
சம்ப்ரம்ம வரிசையொடு தன்னகரைக்கண்டார்
சேடார்ந்த கேகய தேசமதைக்கண்டார்
சேல்விழியாம் பத்திரையைத்திருமணங்கண்டார்
மத்ரதேசத்தில் மாலட்மணையைக் கண்டார்
மாற்றலரை யோட்டியே மணஞ்செய்துக்கொண்டார்
ஏரார்ந்த பத்தினிகள் எண்மரின்சகிதம்
எழில் துவாரகையிலெழுந்தருளினது கப்பல். (எ)

(உச)

கண்ணபிரானிந்தவிதங் களிகூர கனமுடையாராதரும்
தண்பாரிஜாதமலர் சமர்ப்பித்து சர்வக்யனைத் துதி செய்ய.

முதுடு:—நறுமலரை ருக்மணிக்கி நல்கி மகிழ்வாக
நாரதராலுணர்ந்திட்ட நங்கைமனையேக
சத்யபாமாவூடற் ஸ்வாமியின்மேற் கொள்ள
தருநடுவேன்றேட்டத்தென ஸ்வாமியும் விள்ள
ஒரு விதமாய்க்கொண்டவூடலதுதணிய
உம்பர்கோனங்ஙனம் வந்தொடுங்கிப்பணிய
சத்யபாமாவொடு ஜயக் கருடன்மீது
தாவ்ஷடகரா யெழுந்தருளியேமோது
சேனைகளைச் சேதித்து செப்புதற்கரிய
திறலுடைய நரகனைச் செற்று பொறைக்குரிய
தரணியாள் மகிழுபக தத்தனுக்கந்த
தனிநகரையாளுமுடித்ந்துமேமூந்த
அவனாலடைந்த பதினாராயிரத்து
அழகான பெண்மணிகளானவர் திரத்து
ஓர் குறைவுமின்மையா லொரேகும்பலாக
உயர்வான்சிவிகைகளிலொண்டுவகைரயேக
அருளியமராவதியை அடையவயிராணி
அவமதிப்பாற்சத்யபாமையகங் கோணி
இருக்கவுமெம்பிரான் இதஞ்சொலமுன்போலே
இசைமுனிகொடுத்தகண்ணியையுமன்பாலே
உருக்மணிக்களித்த வுபாயந் தெரிந்து
ஊடிபுருஷோத்தமன் மேலுள்ளம தெரிந்து
சலித்திடுஞ் சத்தியபாமாதனையையன் கண்டு
தையலேயென்னவென சதியரே பண்டு
நாரதரால்வந்த நறுமலர்தன்னை
நாதனே ருக்மணிக்கி நல்கினீர் பின்னை
சலித்தவென்றேட்டத்திற் றருநடுவே னென்றீர்
சசிதேவிசெய்ததுவும் தாழ்வெனாவின்றீர்
இந்த முறை வந்ததைபங்கின்படி யெனக்கு
ஈய்ந்திடல்வேண்டுமே யிறையே யுனக்கு
இஷ்டமன்னவள்மீதிருந்தாலும் பாதி
எனக்கீயவாகும்மே யிந்தவந்நீதி

எங்குண்டுயென்னுடைய இஷ்டத்திற்குரிய
இறைவனே வஞ்சனை யிவ்விதப்புரிய
எத்தனைநாளாயெண்ணியிருந்தீரோவென்ன
இசையார்ந்த நாரதரவ் விடந்தனிற்றன்ன
எம்பிரான்நாரதரையிந்திரனிடத்தில்
எவவவர் கேட்கதரு விதுபுவியிடத்தில்
அனுப்புதற்கேலாதென் றமரர்கோன் சொல்ல
அம்மொழியைக்கேட்டவென்னப்பனும் வல்ல
செயக்கருடன்மீது சத்தியபாமையோடும்
சென்றமரர்கோனைச் செயித்ததைவேரோடும்
பிடிங்கி வந்தூடினதோர் பெண்மணியினுடைய
பின்ரேட்டம் நாட்டதரு பெருக்கவதனுடைய
அடிமரஞ்சத்திய பாமாவாதீனமாக
அன்னையாம் ருக்மணிக் கதின்மலர்களாக
திருகநரகன் சிறையை தீர்த்துகொடுவந்த
சேயிழையார் தங்களைசிறப்பாய் மிகுந்த
ஒருமுகூர்த்தந்தன்னி லுயர்மணமுடித்து
உவகையாங்கடலிலே உலவுதையா கப்பல். (எ)

(உரு)

இந்தவிதம் எம்பெருமான் களிக்கடலி லெழுந்தருளி யிருக்கை
[யிலே
சந்தமலர்க்குழலுடைய ருக்மணியின் சதிரானகிரகமதில்.

மூடுது:—பருமணிக் கட்டிலிற் பஞ்சணையின்மீது
பங்கயக் கண்ணன் பாங்கா யமர்ந்தபோது
அதியுசித முளவாடை யணிகள் மேற்கொண்டு
ஐயன துகைங் க்ரியத்தவா மிகக்கொண்டு
ஆலவட்டஞ் சேவிக்கு மவசரந்தன்னில்
அளகபாரம்மவிழ அம்புவிய தன்னில்
நழுவிடவும் நறுமலர்கள் நன்முத்துபோல
நளினமுகம் வியர்வைதர நற்கரத்தாலே

முன்னுச்சிமயிர் நெற்றியை மூடுவதையொற்றி
முறுவலுடன் சேவிக்கு மொழுக்கத்தைப் பற்றி
புன்னகை யோடச்சுதன் புகலுவார் பெண்ணே
புத்தியிறை யேனும் பொருந்தாத கண்ணே
வடிவங்குணங்கள் செல்வத்தினில் மிக்க
மாட்சியுமை யுடைத்தான மன்னர் களிருக்க
அவர்களுக்குச்சரி யாகாதோனையும்
அரசர்பயத்தாலத்தி யடைந்தவனையும்
ஒருவரொடுஞ்சம்பந்த மொன்றாதோனையும்
ஒருவர்நடத்தைக்கு மொத்திரானையும்
பலவான்களுக்கதிக பகையாளியாயும்
பஞ்சைகளினிடமதிக பரிவுள்ளோனையும்
சிம்மாசனம்மேறுஞ் சிறப்பிலானையும்
செல்வர்கள் பூசிக்குஞ் சீரிலானையும்
பிக்ஷைபுகுவோர்களொடு பெருமிடியராசலே
பெரும்பூசைபேய்போலும் பெற்றுமென்மேலே
சந்தோஷமுறுகின்ற சழக்கனுமென்னை
தகுந்தமணவாளனென சார்ந்தாயேயுன்னை
அன்னாள்கொணர்ந்தது முன்னாசையாலல்ல
அரசர்கள் கர்வம் அடங்கச்செய்தேன்நல்ல
அன்பிலாக்கணவனை யடைந்ததிகமிகுதி
ஆகும்வாழ்க்கையிலுயிரை யகற்றலே தகுதி
ஆதலா லாண்மையுள அரசர்களைக்கோரும்
அவசியமதிசுக மடைவதைப்பாரும்
எனுமொழியைநாராசத் தின்றன்மைப்போலே
இருசெவியேற்றன்னைகா வெழில்விரவினாலே
தரைகீறிசாமரந்தன்னைகைவிடவும்
தாவரமிலாக் கொடிபோற் றரையில்வீழ்ந்திடவும்
பகவானுமிவள் மனதைப்பார்க்கலாமென்ற
பரிகாசஞ்செப்பவப் பகர்ச்சினிஜமென்று
சிந்தனை செய்துள்ளந் திகைத்திட்டாளென்று
திவ்யநவமணிகளால் திகழ்மஞ்சரின்று

கீழ்குதித்துப்பெருங் கிருபையது கொண்டு
கேதமதகற்றநான் கெழிற்கரங்கொண்டு
இடையிலுளபீதாம்ப்ர மிருநிலஞ்சோர
என்னன்னை ருக்மணிதன் னெழில்மடியைச்சேர
சீர்பெறத்தூக்கியோர் திருக்கரத்தாலே
திருமேனிதுகளகல திருத்தியொன்றாலே
ஆலிங்கனாதிகளை யாற்றியோர்கரத்தால்
அளகபாரங்களையடக்கியோர்கரத்தால்
பாவையே யுன்னிலமைப் பார்க்கலாமென்று
பரிகாசமாகப் பணித்தல் நிசமென்று
எண்ணிடலாமோவென் னிருகண்ணேயென்ன
என்னன்னைருக்மணியும் எம்பிரான்சொன்ன
வார்த்தையெல்லாம்பகவத் வாக்யமாய்கொண்டு
வர்ணிக்கதேவியர் மகிட்சிமேற்கொண்டு
அச்சுதனும்பதி னாயிரத்தெட்டு
அரிவையர்தங்களிடம் அன்புமேலிட்டு
ஒவ்வொருத்திக்குமோவ் வோருருவதாகி
உலாவவன்னோர்கள் கருவுடையவர்களாகி
பாங்காயொவ்வொருத்தியும் பங்கு பங்காக
பசுங்குழவிபத்தீன்று பரிவதிகமாக
போஜகூடம் ஆளும் புரவலன் செல்வ
புதல்விருக்மாவதியை புயல்வண்ணன்செல்வ
பிள்ளையாம் பிரத்யும்னன் பெருமணஞ் செய்ய
பீதகவாடைப்பிரான் பேரனாந்துய்ய
அநிருத்ரனுக்குத்த னரும்பௌத்ரியான
அணியார்ந்தரோசனையையதிகநலமான
மணமதைருக்குமி மகிழ்ந்தாற்றிமூட
மன்னர்களால் சொக்கட்டான் மாசபையிலாட
பலராமர்தனைருக்மி பரிகாசஞ்செய்ய
பராக்ரம்மமிகுபல பத்ரரவன் கைய
அலாயுதங்கைக்கொண்டடித்துவீழ்த்திட்டார்
அச்சுதனிச்செய்கையை அகத்திலோர்ந்திட்டார்

வாய்திறப்பதற்கொன்றும் வழியிலாதாலே
வதுவர்முதலிய ரொடுவேர் ததுதுவரைகப்பல். (எ)

(உசு)

வண்டுவரை தனிற் கண்ணன் புத்ரபௌத்ரரொடு வாழ்ந்திருக்
[கும் நாளையிலே
பண்டுசெய்த தவப்பலனுல்மங்கைபாகனைப்பேய்ப்படையுடனே

முடுகு.—வாசல்காக்கச்செய்த வாணனுடையப்பெண்
வண்டுவாரகாபுரியில் வாசனுகியதண்
டுளவன்திருப்பேரனைத் துயிற்கனவிற்கண்டு
தோழியரால்தன்னிடந் தூக்கத்திற்கொண்டு
அநுபவிக்கும்நாளினி லப்பாணன்கண்டு
அடைத்தனன் சிறையிலதை யச்சுதனுங்கண்டு
சேனையொடுசென்றுமிகு சீற்றமதுகொண்டு
சிவன்முதலோர்களைவென்று திகிரிகைக்கொண்டு
பாணன்றோள்களையறிய பசுபதிவேண்டிடவும்
பாணிநான்கொழியவுள பாணிகள்சாய்ந்திடவும்
ஒழித்தவன்மகளான உஷையைத்தன்றய்ய
ஒண்டிருப்பேரனுக் குயர்மணஞ்செய்ய
அநந்தரய்நிருகுவின னர்த்தத்தைநீக்கி
ஆயர்ப்பாடிக்கித்தன் னண்ணனைப்போக்கி
சந்தோஷமாசையிற் சங்கிருஷ்ணன்சென்று
தகப்பன்முதலானோர்க்குச் சகலமு நவின்று
அழகானயமுனையில் ஆய்ப்பெண்களோடும்
ஆடத்துவாரகையி லதிகர்வத்தோடும்
பவுண்ட்ரீகனென்பவன் பகைக்கவுஞ்செய்ய
பத்மாட்சனன்னவனைப் பதைக்கவதைசெய்ய
பலபத்ரர்ரைவதப் பர்வதச்சாரில்
பகைசெயரிதுவிந்தனது பலமுடையமார்பில்
குத்திக்குமைத்துகோ குலத்தவர்களடைய
குதூஹலராய்விடை கொடுக்ககரடைய

துரியோதனன்மகளைச் சுயவரந்தனிலே
தூக்கியச்சாம்பனைத் தொட்டுசிறைதனிலே
கௌரவர்கள்வைக்கவுங் கண்ணற்குமூத்தோன்
கடிநகர்சென்றுசில கழறவும்மத்தோன்
மத்தராய்வசனிக்க மமதையைவாட்டி
வதைக்கிறேனென்றலம் வலிகொண்டுமோட்டி
இழுக்கையிலத்திநக ரெழும்பவும்மேலே
இறைஞ்சியேகௌரவர்கள் யேழைகளின்மேலே
தயைசெய்யவேண்டுமென தண்ணளியராக
சந்ததமுமந்நகர் தட்சணம் மேடாக
செய்துலட்மணையொடுந் திறற்சாம்பனோடும்
ஸ்ரீ தனத்தொடுந்துவரை சென்றுவிதியோடும்
மணஞ்செய்துமகிழவும் மலரவன்மைந்தன்
வண்டுவரைதனிற்சென்றுவசுதேவன் மைந்தன்
உயர்நடனங்காணருக்மணி மனையிற்செல்ல
ஒப்பற்ற பூசனையுத்தமன்புரியநல்ல
தூய்தானவோர் மனையிற் சுவாமியைக்கண்டு
தூயதவநாரதர் தொய்யலைக்கொண்டு
அடுத்தமனைசெலமகவை யங்கு தாலாட்ட
அன்பானமனைவியொடோர் அகத்தில் நீராட்ட
மாடவோர்மனையதனி லதிதிகளைப்போற்ற
ஆலோசனையோரில்லில் அமைச்சர்கள்சாற்ற
மகான்கள் காலக்ஷேபமற்றமொருமனையில்
மாவக்நிகோத்ரமோர் வடிவார்ந்தமனையில்
மனைவியொடுபரிகாச மாடவோர் மனையில்
மைந்தர்கள் தமக்குமண மந்திரமோர் மனையில்
புதல்விகளைப் புருஷர் மனைப்போக்கவோர்மனையில்
பொதுப்ரம்ம விசாரணைப்புசழுளவோர் மனையில்
பிரியர்கள் விசாரணைப் பின்னையொரு மனையில்
பிதாவசுதேவரைப்பேணல் ஓர் மனையில்
இவ்வித லீலைகள் கண்டெழில் முனியிறைஞ்சி
ஏகலீலைக்கடலில் எகுதையாகப்பல். (எ)

நறைப்படலைத்துழாய் மார்பன்சந்நிதியில்நலமற்ற சராசந்தன் சிறையரசர்தூதர்வந்து விவரமுடன்செப்பியதோர்முறைகேட்டு

முடுகு:—அச்சுதனுமுத்தவரோ டாலோசித்தன்றே
ஐவர்கள் வசிக்கின்ற வணிநகர்ச்சென்றே
வீமர்ச்சுனனுடன்மூ வேதியர்களாகி
விரைவாய்ச்சராசந்தன் விடுதியினிலேகி
யுத்தபிக்ஷைக்கேட்க உதவிடவுமுடனே
உரமுடையவீமனா லொழித்தவனையுடனே
அரசர்க்குஞானமுரைத்தருஞ்சிறையைநீக்கி
அவன்மகனையரசாக வன்னகர்க்காக்கி
இந்திரபிரஸ்தஞ்சென்றிராஜசூயத்தில்
எற்கவக்ரபூசையிதின் விஷயத்தில்
அரசரிற் சிலர்களினகக்குறியைக்கண்டு
ஐவர்களிலிளையவனாத்திரங்கொண்டு
அக்ரபூசைக்குமன மழலுவோர்சிரமேல்
அஞ்சாதென்னிடது காலதைவைப்பேனினிமேல்
என்னவுஞ்சிசுபாலனிருகண்சிவந்து
எம்பிரானையதிக மேசத்துணிந்து
இடையனுக்கிச்சபையி லேற்றமுண்டாச்சு
ஏர்பெற்றவரசருக்கிழிவதிகமாச்சு
ஆகிலுமிச்சபையிலுண்டான குற்றத்தை
அறைகிறேனதியுசிதமானயாகத்தை
மேன்மையுடன்செய்பவன் விபசாரிபிள்ளை
விவேகமுரைத்தவன் விவஸ்தையிலாப்பிள்ளை
அக்ரபூசையேற்றவன் ஆயர்களைக்கொள்ளை
அடித்தவன் சகாதேவர் அறிவுள்ள பிள்ளை
என்றிருந்தேனறிவு யிவ்வளவுதானா
இடையன் முதற் பூசை யேற்கை சரிதானா
கொற்றவர்கள் ஒன்றங்கூறாதிருந்ததேனோ
கோவிந்தன்மாயப்பொடிகொடுதூவினானோ

மன்னனார்தர்மனைமதியுனக்கிலையோ
மகாசபைதனைமுற்றுமதித்து நோக்கிலையோ
முதற்பூசையேற்றவன் மூத்றிஞவனா
முடிமன்னர்வரிசையில் முதன்மையானவனா
சாதியிலுயர்ந்தவனா சத்தியவந்தனா
தனத்தில் மிகுந்தவனா சௌரியமுள்ளவனா
ஒருவிதந்தன்னிலும் ஒப்பிலாதவனாய்
உரலுடன்கட்டுண்ட வூனமுடையவனாய்
க்யாதியில்லாதவனைக் கீர்த்தியுறச்செய்தாய்
க்ரீடாதிபதிகள்தலை கீழாகச்செய்தாய்
வீஷ்மன்வசுதேவன்வியாசன்விஜயன் மாமன்
விற்குருவோடவர்புத்ர விரலஸ்வத்தாமன்
இவர்களொடுவிஜயனைநே ரேசலவனிருக்க
ஈகையில்மிகுந்த கர்ன்ன வேந்தனுமிருக்க
இடையனுக்கிப்பூசையியற்றினதற்கு
ஏதுவென்னென்னிஷ்டம் என்றாலதற்கு
எங்களையெல்லாம் நீயேனழைத்திட்டாய்
இயல்பானநல்லறிவை யெங்கு கொட்டிட்டாய்
என்றேசியச்சுதனை யெதிர் நொக்கி மூடா
இப்பெரிய பூசையை நீயேற்கலாமோடா
மதிகெட்டுயிவர்கள்தான் வழங்கினு மிடையா
மானமின்றியேற்கலாமோ மதிகெட்ட படையா
கடையாநீ பூசையாற் களித்ததைப்பார்த்து
கௌரவர்கள்யாவருங்கைக் கொட்டியார்த்து
நகைசெய்கிறார்களே நாணமில்லையோடா
நன்றிகெட்டவனுக்கும் நற்பூசையோடா
என்றெம்பிரானை வெகுயிழிவாக யேச
இளையவனும் முன்போலெழுந்திருந்துபேச
அத்துஷ்டன்யாகமதை யழிக்கிறேனென்ன
அது கேட்ட தர்மனெனவநியாயமென்ன
வீஷ்மரால் தர்மனும்விசனமதகல
வித்யாசமாகவவன் வீஷ்மரைப்புகல

அட்சணம் பாண்டவர் அருஞ்சமர் செய்ய
ஆயத்தப்படவவரை யடக்கியே துய்ய
செம்பவள வாயனுந் திருத்தேரிலேறி
திறற்சிசு பாலனொடு சீற்றமதுமீறி
செய்திட்ட யுத்தமதை செப்புதற்காதி
சேஷனாலும்மாகா திறுதியிற் சோதி
சூழ்ந்து விளங்கப்பெற்ற சுதர்சனத்தை
துரிதமாய் விட்டந்த துஷ்டன் சிரத்தை
துழாய்மௌலி யோனுந்துணிக்க வுடனின்று
சோதி யொன்றுத்தோன்றி ஜ்வலித்துமேற் சென்று
அம்புயக் கண்ணன் திருவடிகளினி லடைய
அமரர்கள் மலர்தூவி யானந்த மடைய
திருஷ்டட்ட கேதுவைக்கொண்டு செய்பவைகள் செய்து
திருகின்றி யாகத்தைச் சேடுறச்செய்து
அவரவர்கள் நகரடைந்தாகவுஞ் சிலநாள்
அரவகேதனனவ ரவைவர வோர்நாள்
பளிக்கொளியால் பங்கப்பட்டுத் திகைக்க
பாஞ்சாலியொடு வீமன் பார்த்துமே நகைக்க
நந்தியாவர்த் தனனும் நாணமுடனேக
நளினமலர்க் கண்ணனுள் நற்களிப்பாக
இருக்கையிற் பிரத்யும் நன்யெனும் வீரனுடனே
எதிர்த்திடச் சால்வனும் எம்பிரானுடனே
சார்ந்துதுவரையிற் பலச்சால்வனை யழித்தார்
தந்தவக்ரனுடன் விடூரதனையும் அழித்தார்
ஆயுதமினித் தொடல் ஆகாது யென்றார்
அலாயுதருந்தீர்த்த யாத்திரையாய்ச் சென்றார்
சூதபுராணிகர் மனத்துரிசறச் செய்து
துஷ்டனும் பல்லவனைத் தும்ஸமது செய்து
யுத்தஞ்செய் வீமதுரி யோதனரைக்கண்டு
உரைத்துசிலமொழிவல்ல தமெழனவுட்கொண்டு
அதிவிரைவுடன் த்வாரகாபுரி யடைந்த
அண்ணாவின் சகிதமெழுந் தருளினது கப்பல். (எ)

சமையனுடனெம்பெருமான் மிக்கச் சந்தோஷமுற்றிருக்க கமையுடையகுசேலமுனிநல்குரவின்கதைகேட்பாய் பரீக்ஷித்தே

முடுகு:—மலையனைய நிதியால் மகிழ்ந்தோர் களிக்க
மழலைமொழியுடைய வொருமகவினை யளிக்க
* திருவுளமிலாத் தேவோர் சிற்றெறும்பிற்கும்
திரணமும் வழியிலாத் தீனவிப்ரர்க்கும்
இருபத்தேழ் பிள்ளைகளை யீயவதனோடும்
இணையற்றவதிதி யொன்றிவர்கள் தன்னோடும்
மொத்தக்கணக்கிலிவர் முப்பது பேர்கள்
முனியாங்குசேலர்தனமுண்டான பேர்கள்
இடஞ்சென்றிரத்தலதியிழிவாமென்றெண்ணி
இருளானகாட்டில் தினம் இன்பமுடனண்ணி
புல்லரிசிகொண்டுவரபுகழுடைய மனையாள்
போற்றிகரங்களில் வாங்கி பொறுமையுடனெனையாள்
புயல்வண்ணன் செயலென்று போற்றியேமிக்க
போக்யமுளகஞ்சியாய் புரிந்தன்பாய்த்தக்க
ஆராதனைப்புரிந்ததிதிக்கொன்றாக
அன்பானகணவருக் கதிலொருபங்காக
பாகித்துமிகுதியில் தன்பாகமதை சேர்த்து
பசியால் வருத்தமுறும் பாலர்களைப்பார்த்து
ஒரே வரிசையாய் வைத்து ஒவ்வொருதொன்னை
ஊற்றிக்கொண்டே கையினிலோர் குழவியன்னை
என்றனுக்குக்கஞ்சியிது தானா வென்னும்
இன்னொருமசவம்மாயெனக் கெங்கேயென்னும்
ஒன்றுக்கு வார்க்கையில் மற்றொன்று கர நீட்டும்
ஓ வன்னாய் பசியென்றுபல் லோர் குழவி காட்டும்
ஒரு குழவிகஞ்சியை மற்றொருகுழவி கொள்ளும்
ஒரு குழவி தரை மீதுருண்டழுது தள்ளும்
கஞ்சிழந்தக் குழவி கண்பிசைந் தயரும்

---

* ஊழ்வினையைத் தெய்வத்தின்மேலேற்றியது உலகியல்பு.

கால் வயிறுமிலை யென்றோர்கான்முளைத்துயரும்
அன்னையெனக்கன்னம் அளிக்கவில்லையென்று
அபத்தஞ்சொலுமோர்மக வம்மம்மாவென்று
தாய்கையின் கஞ்சிக்கித்தாவிடுமொருசேய்
தரையினிற் கோபமுடன் றளர்ந்துவிழுமொருசேய்
ஒரு மகவின் கைப்பற்றி யொன்றீர்க்கக்கஞ்சி
ஊற்றுண்டல் பார்த்து மற்றோர்குழவிகொஞ்சி
சிரித்திடும்வேந்தே சிரத்தையுடன் சேளும்
திவ்ய சுந்தரமுளச்சேல்விழியாளும்
பாலர்க்குக்கால்வயிறும் பற்றாமைப்பார்ப்பாள்
பாதியுடம் பாகிமனம்பரன் செயலை சேர்ப்பாள்
கலகஞ்செய்மைந்தர்களைக்காதலாய்ப்பார்ப்பாள்
கடுகெனவெடுத்தெழிலா கத்தினிற் சேர்ப்பாள்
ஒன்றினைக்கண் துடைத்தொன்றைமுத்திடுவாள்
ஒன்றைமுதுகைத்தடவியுபசரித்திடுவாள்
பக்கமனைச்சிறுவனுங்கள்பதியிலின்றென்ன
பணிகாரமென்னவுமப்பாலகன்தின்ன
தென்று தெரியாதோடியென்பிரியவன்னு
எனக்கோதுபணிகாரமென்பதஃதென்னு
எவ்விதருசியுளதஃதெவ்வள விருக்கும்
எனவினவுங்குழவிக்கஃதிவ்விதமிருக்கும்
என்றால் செய்துக்கொடு வென்குமே யென்று
இசைவுடனோர் போக்காக வின்மொழிநவின்று
மறந்திடச்செய்கையில் மறுமனைக்குழவி
வைத்திருக்கின்ற தின் வஸ்துவையோர் குழவி
கண்டுமேதாயிடங்காதலாயோடி
கந்தலாஞ்சேலையைக்கைக்கொடுமென்றாடி
அன்னுயெனக்கவனருந்துவதின்மீது
ஆவலாகின்றது அளிப்பாயிப்போது
என்று சொலுங்குழவிக்கியித்துன்ப நீங்க
எவ்வளவுரைத்தாலும் ஏற்காமலேங்க
எங்குஞ்சேயைப்பார்த்து யென்னதான் செய்வாள்

எழில்மார்பிடைச்சேர்த்திரங்கி மனைவாள்
இவ்விதமிருக்கையினிலின்னொருசேயம்மா
என்மீதுனக்கன்பிருப்பதுஞ் சும்மா
அடுத்தகத்துச்சிறுவனதி சோதியின்ன
அணிந்திடும்பணிகளையணியெனக்கென்ன
ஆஸ்பதமிலாக்கடனாளியைப்போலே
ஆகட்டும் நாளைக்கியா கட்டும்மேலே
என்று சொல்வாள் பாவம் என் செய்வாளையோ
இவ்வுலகுபொருளிலார்க்கிலை யென்கைபொய்யோ
சிறுவர்கள் பலபண்டந்தேவையெனப்பார்ப்பாள்
திறவாமல் வாய்களஞ் செங்கை யிற்சேர்ப்பாள்
பாலர்கட்கற்பமும் பசும் பொனணியில்லை
பட்டாடையை அவர்கள் பார்த்ததுமில்லை
சோற்றுபாலன்றி நற்சரபிபாலில்லை
சுவர்ன்னபாத்திரங்களைத்தொட்டதுமில்லை
பாலர்களொருநாளும் பசிதீர்ந்ததில்லை
பரமபாகவதற்கு மிதிற்பாசமென்பதில்லை
விப்ரரிடம்பத்திக்கி விருப்பங்குறைவில்லை
மெஞ்ஞானிமனவுறுதி விடுகிறதுமில்லை
சனவறுமையாங்கடலின் காட்சியைக்கண்டு
சடிபொழிற்சூழ்துவரையிற் களிப்புறுதுகப்பல் (எ)

(உக)

பாலர்துன்பம் சகிக்காத நற்பத்தினியின்வேண்டலினல்
ஞாலமுண்டநாதனிடம் மிகுபரிவாய் நடப்பதற்கன்னவள்
[கொடுத்த

மூடுது:— கந்தைமுடியாமவலைகக்கத்திற்கொண்டு
சரவதம்பலசென்றுகளைகடலைக்கண்டு
ஓடத்திற்கென்கையிலொருகாசுமிலையே
ஒன்றுங்கொடாதேகுமுயர்த்தியுமிலையே
என்றபலவாயெண்ணி யிதவார்த்தைக்கொண்டு
ஏறிச்சென்றோடமதி விழிதுறையைக்கண்டு

இறங்கியாவிந்தமெனுமீரட்சிகொண்டு
எழில்துவாரகாபுரியினேற்றத்தைக்கண்டு
ஆர்த்தியாய் சேவித்து ஆனந்தங்கொண்டு
அரசாது கூட்டத்தி லதிநெருக்குண்டு
அம்புயக் கண்ணன் முதலணிவாசற் கண்டு
அங்குநிற்குங் காவலாளரைக் கண்டு
செய்திகளை செப்பவங்குன் சேர்ந்த சிலபேர்கள்
சிரித்து பரிகாசமது செய்யவுயர்ந் தோர்கள்
இப்படியுமிருப்பார்க ளென்றவரைத் திட்டி
எம்பிரானெழுந் தருளி யிருக்கு மிடங்கிட்டி
ஜெயவிஜய ரிருவோருஞ் சேடியரைக் கொண்டு
ஸ்ரீதரனைச்சேவித்துசெய்திகளை விண்டு
தாமதியாதந்தணரைச் சடிதியிற்கண்டு
தாட்களில் வணங்கிமா தவனுணை விண்டு
அம்புயக்கண்ணனிடம் அழைத்தேகக்கண்டு
அங்குமுன்பழித்தவர்கள் அச்சமதுகொண்டு
இனிமேல்நம்முடைய கதியேதோவென விண்டு
இருக்கையிற்குசேலரும் எமாப்புகொண்டு
தரித்திரன்பைத் ருகதனங்கண்டாற்போலே
தண்டுளவனைத்தாம ரைக்கண்களாலே
பார்த்தவுடனெம்பிரான்பதைத்தோடிவந்து
பரிவதிகராய்முனி பதங்களில்விழுந்து
சேவித்தாலிங்கனஞ் செய்முறையேசெய்து
சிநேகிதத்தன்மையைச்சிறப்புறச்செய்து
பொற்குடத்திற் நீர்த்தம்புதியதாய்க்கொண்டு
புளகித்து திருமஞ்சனம் புனிதற்குக்கண்டு
திருவொற்றவாடைகொடு திருமேனியொற்றி
திவ்வியபீதாம்பரம் திருவிடையிற்சுற்றி
கர்ப்பூரசந்தனக்கலவைகள் பூசி
கருதரியமுத்துகளைகளிகொண்டுவீசி
திவ்யமலர்மாலைகளைச்சேடுறச்சூட்டி
திருஷ்டி நீங்கத்தூபதீபங்கள்காட்டி

அறுசுவையுண்டிகளையன்புகொண்டூட்டி
அடைக்காயமுதுகளை யன்பாகநீட்டி
பஞ்சணைதனிற் பீதாம் பரமதைக்கொண்டு
பரப்பிக்குசேலர் பாங்காயமரக்கண்டு
எழிற்சாமரங்கொண்டு யின்புடன்வீசி
இணைத்திருவ டிகள்வருடி இஷ்டர்கதைபேசி
ஐயிச்சியமாகச்சில நன்மொழிநவின்றார்
நற்குசேலரும்மில நகூவாது நின்றார்
மாயனுள்மகிழ்ந்துமணமாயிற்றுவுடனே
மனைவியர்நடப்பராவும் மனம்போலவென்றன்
அன்பரேயெத்தனை யருங்குழவியுண்டு
அவர்களையணிமுதலாடைகளைக்கொண்டு
ஒளிபெறச்செய்தீரா வுபநயனவிதிகள்
உயர்வுடன்கண்டீரா வோதினராகலைகள்
என்றின்னம்பலவினவியிஷ்டரேபண்டு
இருவரும்சற்சையினிலெரிகரும்புகொண்டு
வரவேண்டுமென்றுகுரு மனையாளுமருள
மாகானஞ்சென்றுபெருமழையில் மனமருள
புன்னையடியிற்குருவாம் பூசுரருங்கண்டே
புளகிதராய்நம்மொடுமூர் புக்கினதுமுண்டே
ஞாபகமுண்டாவுமக்குநாளதிகஞ்சென்று
நாடிவந்தீரேயென் னன்பரேயின்று
என்னகொடுவந்தீர்கள் யான்றின்பதற்கு
ஏன்வெட்கமுறுகிறீர் எனக்களிப்பதற்கு
கொடுமென்னவந்தணர்குனிந்தசிரமுளராய்
கூச்சமடையக்கண்டுகுதூஹலமுளராய்
கக்கமுறுவியர்வையின் கசருடையவவலை
சடுகப்பிடுங்கியேகட்டவிழ்த்திவ்வவலை
எனக்களித்திடவுமக்கிஷ்டமில்லைபோலும்
என்றருளிதாமரையுமெதிர்சொலத்தோலும்
ஒண்கரத்தாலவலி லுகப்பாயோர்பிடியை
ஒண்பவளவாய்கொண்டவ்வுத்தமர்மிடியை

நீக்கியென்னேசரே நீர் கொண்டுவந்த
நேர்த்தியுள அவல்ருசியாய் நெய்மணமுமுந்த
வீசுகிறதேயெல்லம் வேண்டாமலின்னும்
யெல்லஞ்சேர்ந்தாலெவ்விதமாமோ தன்னும்
இஷ்டரே அவலிலெனக்கின்பதிகமென்று
யாராகிலும் இசைத்திட்டனரோவென்று
திருமுடிதனைப்புன்சிரிப்பாயசைத்து
ரெய்வமணம் வீசுகிறதேயென்றிசைத்து
மற்று...டியள்ளமா துருச்மணியும்
மலர்க்கரம்பற்றவும் மணத்துழாயணியும்
முகுந்தனுஞ்சேஷத்தைமுடிந்திட்டுவோர்நாள்
முறையுடன்பூசித்துமுனிவரைமறுநாள்
ஆதரத்துடனே தன்னணிநகர்க்கேக
அன்புடனேவழிவிட்டந்தப்புறமேக
அச்சுதன்செயலைக்கண் டணிநகரிலுள்ள
அம்பன்னகண்ணுர் களனந்தமாய் விள்ள
குதூஹலராகவே குசேலருஞ் சென்ரூர்
குபேரனுலகனையநகர் குறுகியே நின்ரூர்
எதிர்கொள வருகின்றவிரதமுதற் கண்டார்
எம்பிரான் செயலென்றி ரதமேறிக்கொண்டார்
சேண்டெட்ருவே சென்றுதிரு நிசழ்மனையைக் கண்டார்
திவ்யவுபசாரங்கள் தேவியாரால் கொண்டார்
சம்பத்தில் சற்றுங்கால் தாழாமல் நின்ரூர்
தண்டுளவன் பக்தியினில் சலியாது நின்ரூர்
இவ்விதம் பக்தியா ழியிலிழிந்தவரை
எழிலார்ந்த மோக்ஷகரை யேற்றினது கப்பல். (௭)

(௩௰)

குசேலமுனிக் கருள்புரிந்த கோவிந்தன் குவலயத்தினிருள்
[துரத்தும்
பசேலென்னும்நிறமுடையவழுபரித்தேரோன் கிரஹணம்மதில்
முடுகு:— சிமந்தபஞ்சக மடுவைச் சீக்கிரங்கண்டார்
திறற்றருமன் முதலான நிரள்க்களைக் கண்டார்

கோகுலத்தவர்களைக் கூட்டமாய்க் கண்டார்
கோபியர்கள் ஞானமொழி குறைவறக்கொண்டார்
தந்தையின்யாகத்தைத் தாவரக்கண்டார்
தனயர்க்கிரங்குந் தன்றாயினைக் கண்டார்
தனயரைத்தந்துதாய் சந்தோஷங் கண்டார்
தங்கையை விஜயற்குத் தனிமணங்கண்டார்
பகுளசுருத்தேவர்களை பரிவாகக் கண்டார்
* பத்மாசுரன்றனைப் பஸ்பமாய்க்கண்டார்
† பிருகுவால்முனிவர்க்குபிரம்மநிலையருளி
பெற்றிழக்குமறையோரின் பிள்ளைகளையருளி
ஆதிசேஷனும் அளவிடற்கரிய
அழகான துவரையில் அருநடம்புரிய
பதினாறாயிரத்தெட்டு பத்தினிகளோடும்
பண்புடையபுத்திர பௌத்திரர்களோடும்
நிரசம்பிரமாய் ஜெகஜோதியான
சிரிபசிங்காதனத்திற் சேர்ந்ததையாகப்பல்.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

முற்றிற்று.

ஓம்.

விளம்பரம்.

ஆலாலசுந்தரர் புத்தகசா

திருவெண்ணெய்நல்லூர்.

இப்புத்தகசாலையில் சொற்சுவை, பொருட்சுவை
தாக பாடப்பெற்று தமிழ்பயிலுவோருக்கு இன்றி
அடியிற்கண்ட புத்தகங்களும், மற்ற அரிய நூல்களும்
கும். வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு
கொள்ளவும்.

திருவெண்ணெய்க்கலம்பகம் விலை ... ...

சித்திரகரந்தாதி ... ...

ஸ்ரீமத்பாகவத ஏலப்பாட்டு ... ...

வியாபாரிகட்குத் தகுந்த கமிஷன் கொடுக்கப்

....

தி. வடிவேலு முதலியார்,